அரசு ஊழியர்

மாத இதழ்

2022 செப்டம்பர்

மலர்:43 இதழ்:09

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஆசிரியர் குழு:
மு.அன்பரசு, மு.பாஸ்கரன்,
தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன்,
கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி,
சா.டானியல் ஜெயசிங்,
சா.கோதண்டபாணி, அ.குபேரன்

வரைகலை: கார்ட்டூன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி

முகவரி:

பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

அச்சகம்:

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர்
தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200
தனி இதழ் : ரூ.20

இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

# உள்ளே...

1. வாழ்வாதார நம்பிக்கைகளை வளர்த்தெடுப்போம்!
*தலைவர் மடல் ............................4*

2. படையென திரள்வோம் ! வாழ்வாதார நம்பிக்கை மாநாட்டில்!!
*பொதுச் செயலாளர் மேசையிலிருந்து.............................6*

3. நமது போராட்டம் இப்போதான் துவங்கியுள்ளது! .............................11

4. செம்மை மாதரும் திமிர்ந்த ஞானச் செருக்கும்! ...................................13

5. ரப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல!.........................16

6. மங்காத நினைவுகளுடன் சங்கு முழங்கிய மகளிர் மாநில மாநாடு.....................19

7. பூக்களின் புரட்சி மாநாடு - ஒரு குயில் பார்வை.......................23

8. பூக்களும் போர் தொடுக்கும்!.............27

9. தொழிற்சங்கத்தில் தோழியரின் பங்கு!..29

10. மனிதம் மறந்த வணிகம்..................31

11. நன்றி சொல்ல உமக்கு வார்த்தை இல்லை எமக்கு! ..........................32

12. பெண்ணின் பெருந்தக்க யாவுள ......33

**அன்பார்ந்த வாசகர்களுக்கு**
**காகிதம் (தயாரிப்பு செலவுகள்) தொடர் விலையேற்றம் காரணமாக இந்த மாதத்தில் இருந்து அரசு ஊழியர் மாத இதழின் தனி இதழ் விலை ரூ.20 ஆகவும், ஆண்டு சந்தா ரூ.200 ஆகவும் உயர்த்தப்படுகிறது.**

தலைவர் மடல்

# வாழ்வாதார நம்பிக்கைகளை வளர்த்தெடுப்போம்!

இதுவரை இதுபோல் நடந்திருக்குமா என்று தெரியவில்லை. இனிமேலும் இப்படி ஒரு மாநாடு நடக்குமா என்று தெரியவில்லை. கிருஷ்ணகிரியில் நடந்து முடிந்த ''மகளிர் மாநில மாநாடு'' நினைவுகள் இன்னும் நெஞ்சில் நிரைந்திருக்கின்றன.

முழுக்க முழுக்க பெண்களால் நடத்தப்பட்ட மாநாடு இது என்பதே ஒரு சாதனைதான். மே மாதம் சேலத்தில் நடைபெற்ற மாநில செயற்குழுவில் மகளிர் மாநில மாநாடு நடத்த வேண்டும் என்ற கருந்துரு எழுந்தபோது அதை நடத்தித் தருவதற்கு கிருஷ்ணகிரி மாவட்டம் முன்வந்தது. எதையும் சவாலுடன் எதிர்கொள்ளும் கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகிகளும் ஊழியர்களும் நிச்சயம் இந்த மாநாட்டிற்காக உடலாலும் பொருளாலும் பெரும் பங்களிப்பைச் செலுத்தி யிருக்கிறார்கள். நமது சங்க விதிமுறைகளிலேயே பெண் நிர்வாகிகளுக்கான விகிதாரச்சாரம் வகுக்கப்பட்டு அதை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறோம். அதனால் பெண் நிர்வாகிகள் பலபேர் சங்கத்துக்குள் இருக்கின்ற காரணத்தினால் முழுக்க முழுக்க மகளிரைக் கொண்டே இதை நடத்த வேண்டும் என்று முடிவு இறுதியாக்கப்பட்டது.

முதன்முறையாக வரவேற்புக்குழுத் தலைவராக ஒரு மகளிரை தேர்ந்தெடுத்து அவரிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டது பெருமிதமாக இருந்தது. பெண்களின் உரிமைகள் பற்றி வாய்கிழியப் பேசுபவர்கள் முக்கால்வாசிப்பேர்கள் தங்கள் வீட்டுப் பெண்களை அடிமைகள் போல் நடத்துவதை நாம் பார்த்திருக்கிறோம். இந்த மாநாடு ஏதோ மாநாடு நடத்த வேண்டும் என்பதற்காக நடத்தப்படாமல் உண்மையிலேயே பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற வகையில் நடத்தப்பட வேண்டும் என்று நினைத்தோம். அந்த எண்ணம் கொஞ்சம் கூட மாறாமல் அப்படியே நடந்து முடிந்தது மாநாடு.

வழக்கம் போல் இல்லாமல் இந்த மாநாடு வித்தியாசமானதாகவும் சிறப்பானதாகவும் அமைந்து விட்டது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்பட்டிருந்த பெண் ஆளுமைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் அனுபவம் வாய்ந்தவர்கள் என்பது அவர்கள் வாயிலிருந்து வந்து விழுந்த வார்த்தைகள் கூறின. சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்பட்டிருந்த அகில இந்தியஜனநாயக மாதர் சங்கத்தின் அகில இந்திய துணைத்தலைவர் உ.வாசுகி அவர்களின் வீச்சு உரையும், சென்னை உயர்நீதிமன்றத்தின் மாண்புமிகு மேனாள் நீதிபதி திருமதி விமலா அவர்களின் சட்டபூர்வமான விளக்கங்களும் பெண் விடுதலை பெண் உரிமை பாலின சமத்துவம் போன்றவற்றில் பெண்கள் பெற வேண்டிய விழிப்புணர்வுகள் குறித்தும் தனக்கே உரிய பாணியில் பேசியதும் மகளிர் மாநில ஆணையத் தலைவி திருமதி குமரி அவர்களின் உரை வீச்சும் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வந்திருந்த மகளிர் தோழர்களை உற்சாகப்படுத்தியது.

பயனுள்ள தகவல்கள் கிருஷ்ணகிரி மாவட்ட அலுவலர் திருமதி விஜியலட்சுமி அவர்களின் பேச்சு நம்பிக்கையையும் தைரியத்தையும் மாநாட்டிற்க வந்திருந்த பெண்களிடம் ஊட்டின. துவக்க உரைக்கும் மநாட்டுப் பேருரைக்கும் ஈடுகொடுக்கும் வகையில் அமைந்திருந்தது. கருத்துரை அமர்வு '' பெண்ணிற் பbருந்ததக்க யாவுள?'' '1'தொழிற்சங்கத்தில தோழியரின் பங்கு'' ''துhண்டா மணிவிளக்குதான் தீண்டினால் தீப்பிழம்பு'' ''பூக்களும் போர் தொடுக்கும்'' போன்ற வித்தியாசமான தலைப்புகளில் பெண் நிர்வாகிகள் அற்புதமான உரையாற்றி அசத்தினார்கள்.

முழுக்க முழுக்க பெண்களே பங்கேற்ற இந்த மாநாடு தமிழகம் மட்டுமல்லாது இந்திய அளவிலும் பேசப்படுகின்ற அளவுக்கு பெருமை கொண்டதாக மாறியிருக்கிறது என்றால் அதற்கு காரணம் மாநாட்டில் பேசிய தோழியர்கள் முதல் மாநாட்டு வருகைக்கு தந்து சிறப்பித்த அனைத்து தோழியர்கள் என்றால் அது மிகையல்ல. இந்த மகளிர் மாநாட்டிற்குப் பிறகு பெண் ஊழியர்கள் பலபேர் அரசு ஊழியர் சங்கத்தை நோக்கி

வர ஆரம்பித்திருக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் பெண்கள் உரிமை, சமத்துவம், பெண் சுதந்திரம் போன்றவற்றை பேணிக்காக்கும் கொள்கைகளை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எப்போதும் கொண்டிருப்பதுதான்.

இப்போதுதான் முடிந்தது போலிருந்தது மகளிர் மாநில மாநாடு. அதற்குள் ஜாக்டோ ஜியோ மாநாடு வந்துவிட்டது. எல்லா நிர்வாகிகளும், தோழர்களும் தேனீக்களைப் போல் வட்டமடித்து மாநாட்டுப் பணிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் ஜாக்டோ ஜி யோ மாநாட்டில் கலந்து கொள்ள இசைவு நல்கியுள்ளது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் மத்தியில் மிகுந்த எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த மாநாட்டிலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பணியும் பொறுப்பும் 80 சதவீதத்திற்கும் குறையாமல் இருந்தது.

மாநாட்டிற்காக முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து நாள் கேட்ட போது மநாட்டின் பெயரை கோரிக்கை மாநாடு என்றோ அல்லது நன்றி அறிவிப்பு மாநாடு என்றோ வைக்கக் கூடாது என்று கண்டிப்பாக கூறியிருந்ததால் வாழ்வாதார நம்பிக்கை என்றபெயரில் மாநாட்டை நடத்துவது என் ஒருங்கிணைப்பாளர்களும் உயர்மட்டக்குழுவினரும் முடிவெடுத்தனர். மாநாடு நடக்கும் நாளான செப்டம்பர் 10 திருப்பு முனை நாளாக அமையும் என்றே லட்சக்கணக்கான ஊழியர்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் பரப்புரையின் போது நியாயமான நம் உரிமைகளுக்காக அவர் குரல் கொடுத்ததையும், திமுக ஆட்சிக்கு வந்தால் நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக உறுதி அளித்ததையும் நாம் யாரும் மறந்துவிட முடியாது. ஆனால் திமுக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது இருந்த கடுமையான கொரோனா கொடுந்தொற்று சூழலாலும், அரசுக்கு கடுமையான நிதிப்பற்றாக்குறை இருந்ததாலும் நம்முடைய கோரிக்கைகளை தள்ளி வைத்திருந்ததுடன், நிதி நிலைமை சரியானதும் அவற்றை படிப்படியாக நிறைவேற்றுவதாக உறுதி அளித்திருந்தார்.

அரசாங்கத்திற்கு உள்ள நிதி நெருக்கடிகளை உணர்ந்து நாமும் பொறுமை காத்து வருகிறோம். கடந்த ஒன்றரை ஆண்டுகளில் அகவிலைப்படியைத் தவிர்த்து வேறு எந்த கோரிக்கையையும் நிறைவேற்றப்படாத நிலையில், ஜாக்டோ ஜியோ மாநாடு நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்றிட ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. மாண்புமிகு முதல்வரும் நம்முடைய கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்பதை உணர்ந்துள்ள நிலையில் அவர் நமது ஜாக்டோ ஜியோ மாநாட்டின் மூலம் நம்முடைய கோரிக்கைகளில் படிப்படியாக நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது. நம்முடைய கோரிக்கைகளில் சிலவற்றையேனும் மாநாட்டிற்கு முன்னரோ அல்லது மாநாட்டிலோ நிறைவேற்றுவதாக தெரிவித்து அதற்கான நடவடிக்கைளையும் மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கியுள்ளது நமக்கு உற்சாகத்தை ஏற்படுதியுள்ளது. மாநாட்டில் சில கோரிக்கைகள் நிறைவேற்றப்படலாம் மற்றவை தள்ளிவைக்கப்படாலாம். நம்மைப் பொறுத்தவரை எல்லா கோரிக்கைளும் முக்கியமானவை எல்லா உரிமைகளும் இரத்தம் சிந்திப் பெற்றவை என்பதை மறந்து விடாமல் இழந்த உரிமைகளை மீட்கவும் இருக்கும் உரிமைகளை காக்கவும் வாழ்வாதார நம்பிக்கைகளை வளர்த்தெடுப்போம்.

## சூடா ஒரு கோப்பை சூப்

### ஜன்னல் கதவுகள்

**ஒரு மழை நாளில்,**
**ஓங்கி வீசிய காற்றில்**
**சிக்கிக்கொண்ட ஜன்னல் கதவுகளை**
**திறக்கச்சொல்லி**
**நான்காவது முறையாக**
**முறையிட்ட மனைவியிடம்**
**கோபப்பட்டேன்.**
**“அலுவலகத்துக்கு**
**நேரமாகிவிட்டதென்று**
**நீ போய்விட்டால்**
**என்ன செய்வது?”**
**என்றவள் உடைந்து சொன்னாள்,**
**“வானத்தைப் பார்க்க உனக்கு**
**பல இடங்கள் உண்டு**
**வானம் என்னைப் பார்க்கும்**
**ஒரே இடம் அதுதான்!”**

**– மனோஹரி**

# படையென திரள்வோம் !!
# வாழ்வாதார நம்பிக்கை மாநாட்டில் !!!

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உதயமான 1984 மே 6ல் 38 ஆண்டுகளை கடந்து 39வது ஆண்டு வீறு நடை போட்டுக் கொண்டிருக்கிறது. 38 ஆண்டுகளில் இதன் சாதனைகள் பட்டியலிட்டால் பக்கங்கள் போதாது. இந்த அமைப்பு துவங்கிய நாள் முதல் இன்று வரை அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் உரிமைகளுக்காக மட்டுமின்றி சகல பகுதி உழைப்பாளி மக்களின் கோரிக்கைகளுக்காகவும் குரல் கொடுத்து வருகிறது. தொடர்ந்து போராடி வருகிறது. 38 ஆண்டு கால போராட்டங்களின் மூலம் எண்ணற்ற உரிமைகளை பெற்றுக் கொடுத்திருக்கிறது.

அரசு ஊழியர், ஆசிரியர்களை ஒருங்கிணைத்து தொடர் போராட்டங்களை மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை பெற முதலில் 26.05.1985ம் தேதி நான்காவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் மீதான அரசாணை வெளியிட்டது. இந்த ஊதிய மாற்றம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு கடும் ஏமாற்றத்தை அளித்தது. அதனை தொடர்ந்து பல போராட்டங்கள் நடத்தப்பட்டது. 16.08.1985ல் அனைத்து ஆசிரியர் அமைப்புகளும் சேர்ந்து ஜாக்டீ ஏற்படுத்தின. இதன் காரணமாக போராட்டம் தீவிரம் அடைந்தது. 5.9.1985 ஆசிரியர் தினம் துக்க தினமாக அனுசரிக்கப்பட்டது. தீபாவளியை சிறையிலேயே கழிக்க வேண்டி வந்தது.

ஜாக்டீ அமைப்புடன் ஜாக்சாட்டோ அமைப்புகளை போராட்டத்தில் ஒருங்கிணைத்திட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. ஆனால் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தலைமைச் செயலக சங்கம், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் போன்ற அமைப்புகளும், ஆசிரியர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வெளிநடப்பு போராட்டம் நடத்தின. அதனை தொடர்ந்து 1986 செப்டம்பரில் வேலூரில் நடந்த தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் இரண்டாவது மாநில மாநாட்டில் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் என்ற கோரிக்கையும், அதனை அடைவதற்கு அரசு ஊழியர், ஆசிரியர் இணைந்த வேலை நிறுத்தம் போன்ற வலுவான போராட்டங்களும் அறைகூவல் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அகில இந்திய கோரிக்கை நாள், உண்ணாவிரதம், அகில இந்திய எதிர்ப்பு நாள், தமிழகம் தழுவிய வேன் பிரச்சாரம், வட்ட/மாவட்ட தலைநகரங்களில் பேரணிகள் வேலை நிறுத்த ஆயத்த மாநாடு போன்ற பல்வேறு இயக்கங்களை தொடர்ந்து நடத்தியது. இந்த இயக்கங்களில் அரசு ஊழியர்கள் மட்டுமின்றி ஆசிரியர்களையும் உற்சாகப்படுத்தி ஒன்றுபட்ட போராட்டம் தேவை என உணரச் செய்தது.

25.12.1987ல் எம்.ஜி.ஆர். மறைவுக்கு பின் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையிலும் சம்பள வெட்டு மற்றும் பல்வேறு ஒழுங்கு நடவடிக்கைகள் என்ற பயமுறுத்தல்களுக்கெல்லாம் அஞ்சாமல் 10.02.1988ம் தேதி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்திய ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் சுமார் 1 லட்சம் ஊழியர்கள் கலந்து கொண்டது ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அரசு ஊழியர் சங்கத்தின் தொய்வில்லாத நடவடிக்கைகளால் ஏப்ரல் 1988ல் ஆசிரியர்,அரசு ஊழியர் இயக்கங்களின் பேரமைப்பு உருவாக்கப்பட்டது. இவை இணைந்து மறியல் போராட்டம், பிரச்சார இயக்கம், வேலை நிறுத்த ஆயத்த மாநாடு போன்றவற்றை நடத்தியும் அரசின் பாராமுகம் தொடர்ந்ததால் 22.06.1988ம் தேதி காலவரையற்ற வேலை நிறுத்தம் தொடங்கப்பட்டது. அரசின் அடக்கு முறைகளுக்கு அடிப்பணியாமல் தலைவர்கள் பலர் சிறைக்கு அனுப்பப்பட்டு போராட்டம் முழு வீச்சில் முன்னேறியது. வேறு வழியில்லாமல் 12 நாட்களுக்கு பிறகு என்.ஜி.ஓ. சங்கம் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றது. 22.07.1988ல் லட்சக்கணக்கான

ஊழியர்கள் சென்னையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

அப்போதிருந்த கவர்னர் அரசாங்கம் போராட்டத்தின் வலிமையை கண்டு ஜாக்டீ- அரசு ஊழியர் பேரமைப்பின் நிபந்தனையை ஏற்று கைதான தலைவர்களை விடுதலை செய்து பேச்சு வார்த்தை நடத்தியதின் பேரில் போராட்டம் விலக்கி கொள்ளப்பட்டது. இந்த வேலை நிறுத்தத்தில் உடனடிப்பலன் எதுவும் இல்லையென்ற போதிலும் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் மற்றும் போனஸ் ஆகியவற்றை வழங்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது.

1989ல் நடைபெற்ற தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றது. 13 ஆண்டுகளுக்குப் பின் ஆட்சி பீடம் ஏறிய தி.மு.க. அரசிடம் அரசு ஊழியர், ஆசிரியர்கள் பெரும் எதிர்பார்ப்பை கொண்டிருந்தார்கள். அதன் அடிப்படையில் ஊதியக் குழுவின் பரிந்துரையை தி.மு.க. அரசு 01.06.1988 முதல் மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை அமல்படுத்தி 27.06.1988ல் ஐந்தாவது ஊதிய மாற்றத்திற்கான அரசாணை வெளியிட்டது. இதன் மூலம் அரசு ஊழியர், ஆசிரியர்களின் 42 ஆண்டு கால கனவு நிறைவேறியது.

ஐந்தாவது ஊதிய மாற்ற அமலாக்கத்திலிருந்த குறைபாடுகளை சுட்டிக்காட்டி 1989ல் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மூன்றாவது மாநாட்டில் பங்கேற்ற டாக்டர் கலைஞர் அவர்கள் குறைபாடுகள் இருப்பதை ஏற்றுக்கொண்டு அவற்றிற்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண முன் வந்தவுடன் கடந்த ஆட்சி காலத்தில் தொடுக்கப்பட்ட அனைத்து பழிவாங்கல் நடவடிக்கைகளையும் ரத்து செய்வதாகவும் அறிவித்தார்.

1991ல் அதிமுக ஆட்சியில் கடும் போராட்டத்திற்கு பிறகு 05.08.1992 முதல் வேலை நிறுத்தம் அறிவிக்கப்பட்டு அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி அமைச்சுப்பணியாளர்களுக்கு 5 சதவீதம் தனி ஊதியம் , மேலும் தேர்வு நிலை, சிறப்பு நிலை முன்னேற்றம் காணப்பட்டது.

1996ல் நடந்த தேர்தலில் மீண்டும் தி.மு.க. ஆட்சியைப் பிடித்தது. 1.1.96 முதல் ஆறாவது ஊதிய மாற்றம் ஏற்படுத்தப்பட்டு அதற்கான அரசாணைகள் 1.1.98ல் வெளியிடப்பட்டன. அதன் மூலம் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் மீண்டும் அமலானது.

மேற்கண்ட வரலாற்று பின்னணியில் தான் அரசு ஊழியர், ஆசிரியர், அரசுப் பணியாளர் பேரமைப்பான ஜாக்டோ-ஜியோ 2017ல் ஏற்படுத்தப்பட்ட நியாயமான 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வலுவான கட்டமைப்பை மீண்டும் உருவாக்கி கடந்த 22.01.2018 முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை தொடங்கியது. இதுவரை இல்லாத அளவுக்கு இப்போராட்டம் எழுச்சியோடும், உணர்வு பூர்வமாகவும் நடைபெற்றது. ஊழியர்களின் எழுச்சியை கண்டு கடந்த அ.தி.மு.க. அரசு அழைத்து பேசி கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பதிலாக கடுமையான அடக்குமுறையை ஏவியது.

இந்த அடக்குமுறையினால் பல ஆயிரக்கணக்கான பேரின் மீது பொய் வழக்கு புனையப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டனர். ஆயிரக்கணக்கான ஊழியர்கள் மீது 17(ஏ) குற்றச்சாட்டுகள் பிறப்பிக்கப்பட்டது. போராட்டம் ஒவ்வொரு நாளும் ஐந்தாயிரத்திற்கும் குறையாத அளவிற்கு மாவட்டங்களில் ஆர்ப்பாட்டமும் மறியலும் நடைபெற்றது.

இதனை தாங்கிக் கொள்ளாத காவல்துறை ஊழியர்களிடம் நடந்து கொண்ட அணுகுமுறை மிகவும் மோசமாக இருந்தது. காவல்துறையை ஏவிய அரசின் அனைத்து அடக்குமுறைகளையும் தாண்டி மாநிலம் முழுவதும் போராட்டங்கள் வீறுகொண்டு எழுந்தது. பொதுவாக இந்த போராட்டத்தை தவறாக சித்தரிக்கப்பட்டு பொது மக்களுக்கும், மாணவர்களுடைய நலனுக்கு எதிரானது எனவும் திசை திருப்பப்பட்டது.

இந்த போராட்டத்தின் போது அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும், தொழிற்சங்கங்களும் ஆதரவளித்தன. (குறிப்பாக மாண்புமிகு தமிழக முதல்வர், எதிர்கட்சித் தலைவராக இருந்தபோது போராட்ட களத்திற்கு வந்து ஆதரவு தெரிவித்தார்) இவ்வளவு அடக்கு முறைக்கு பின்பு போராட்டத்தின் வீச்சு குறையாத காரணத்தால் அ.தி.மு.க. அரசு ஆசிரியர்களை பணி மாறுதல் செய்தது.

முதல் முறையாக இந்திய வரலாற்றில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் நடத்திய இந்த ஜாக்டோ-ஜியோ போராட்டம் மகத்தான பதிவை செய்திருக்கிறது. அரசு அடக்குமுறைகளை ஏவிவிட்டு பேச்சு வார்த்தைக்கும் அழைக்காமல் இப்படிப்பட்ட போராட்டம் இனிமேல் நடத்தக் கூடாது என்று கங்கணம் கட்டி முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மாணவர் நலன் கருதி போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்து அனைவரும் பணிக்கு திரும்புமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இந்த களச்சூழ்நிலையை கருத்தில் கொண்டு மீண்டும் பீனிக்ஸ் பறவைப் போன்று எழுந்து வருவோம். அதற்கான கால அவகாசத்தை எடுத்துக்கொண்டு இதே அரசிடம் நமது கோரிக்கைகளை வென்றெடுப்போம் என்ற அடிப்படையில் ஜாக்டோ-ஜியோ உயர் மட்டக்குழு இவற்றை பரிசீலித்து போராட்டத்தை தற்காலிகமாக ஒத்திவைத்து பாதிப்பிற்குள்ளாகி இருக்கக்கூடிய அரசு ஊழியர், ஆசிரியர்களை பாதுகாக்க வேண்டிய கட்டாய கடமை இருக்கின்ற உணர்வு அடிப்படையில் ஜாக்டோ-ஜியோ அதற்கான முயற்சிகளும் மேற்கொண்டது.

அடக்கு முறையை ஏவிவிட்டு இந்தப் போராட்டத்தை முடக்கி விட்டோம் என்று நினைக்கும் அ.தி.மு.க. அரசுக்கு சரியான பாடத்தை நாடாளுமன்றத் தேர்தலில் புகட்டுவோம் என்றோம். அ.தி. மு.க. படுதோல்வி அடைந்து தி.மு.க. 39 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர்களை அழைத்து பேசி பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் அ.தி.மு.க. இந்திய குடியரசு தினத்தில் அரசு ஊழியர், ஆசிரியர்களை கைது செய்து சிறையிலடைத்தது நெஞ்சில் மாறாத வடுவை உருவாக்கியது. அந்த அடிப்படையில் அ.தி.மு.க. கூட்டணியை வீழ்த்தி இன்னொரு முறையாக பகை முடிக்கும் பணி முடித்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் யாரென்று இந்த பாருக்கு பறைசாற்றினோம்.

அந்த ஜனநாயக கடமையை நாம் மட்டும் செய்தால் போதாது நம் குடும்பத்தாரும் சேர்ந்து செய்ய வேண்டும். குடும்பத்தார் மட்டும் செய்தால் போதாது நாம் குடியிருக்கும் தெருக்களில் உள்ள பொது மக்களுக்கும் அதை செய்ய வைக்க வேண்டும். மத்தியில் உள்ளோர் சொல் கேட்டு மக்கள் நலனை மறந்து செயல்படும் அ.தி.மு.க. அரசை மக்கள் எப்படி தண்டிப்பார்கள் என்பதற்கு இந்த தேர்தல் ஒரு சிறந்த உதாரணமாக இருக்க வேண்டும். அதற்காக ஒவ்வொரு அரசு ஊழியரும், ஆசிரியரும் நமக்கு தெரிந்த அனைவரிடமும் யார் நல வேட்பாளர் ? அவருக்கு நாம் ஏன் வாக்களிக்க வேண்டும் என்கிற சிந்தனையை விவரித்து சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று உரக்கச் சொன்னோம். நம்முடைய செயல் சிறியதாக இருக்கலாம். ஆனால் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தியிருக்கிறது.

ஆம் தோழர்களே !

பொதுவாக ஒரு நல்லாட்சி அரசு அதன் ஊழியர்களை எப்படி நடத்த வேண்டும் என்று 2017ல் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

மாநில அரசின் பங்கு என்பது ஊழியர்களைப் பொறுத்த மட்டில் ஒரு முன்மாதிரி முதலாளியாக இருக்க வேண்டும். எதிர்காலத்தில் ஊழியர்களின் உரிமை கோரிக்கைகளின் பேரில் சினம் கொள்ளாமல் அது இருக்கும் என்ற எதிர்பார்ப்பையும், பொறுப்பில்லாத அலட்சியப் போக்குடன் பெரிய அளவில் விலகி நின்று வேடிக்கை பார்க்காது என்ற நம்பிக்கையையும் ஊழியர்களிடம் ஏற்படுத்த வேண்டும். ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை அது எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களின் நம்பிக்கை நீர்த்துப்போகும் சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடாது. ஒவ்வொரு ஊழியரின் நம்பிக்கையும், மதிப்பும், மகிமையும் வாய்ந்தது. அதை முன்மாதிரி முதலாளியாக இருக்கும் அரசு ஏமாற்றமாகவோ, துரோகமாகவோ மாற்றி அவர்கள் பணியேற்றத்தில் சதுரங்க விளையாட்டு ஆடக்கூடாது. அமைதி உணர்வும், சிரத்தையான நேர்மையும் ஒவ்வொரு நிகழ்விலும் எதிரொலிக்க வேண்டும். நம்பகமான சூழல் நிலவ வேண்டும். ஊழியர்கள் அனைவரும் கண்ணியத்துடனும் நேர்மையாகவும் நடத்தப்படுகிறோம் என்றும் தங்கள் நம்பிக்கைக்கு பங்கம் ஏற்படாது என்று நிச்சயமாக நம்ப வேண்டும். அப்போதுதான் நல்லாட்சி என்று கருதப்படும் உறுதிபடும்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவரும் இந்த அரசை மேற் கூறப்பட்ட தீர்ப்புகள்

அடிப்படையிலேயே நம்பி வருகிறார்கள். அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் பரிசீலித்து தி.மு.க. அரசு நிறைவேற்றும் சூழல் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறோம். அப்போது தான் அரசு நிர்வாகமும் மக்கள் திட்ட பணிகளும் தொய்வின்றி நடக்கும். சமூகத்தில் நலமும் வளமும் செழிக்கும்.

மேலும் இன்றைய உலகமயமாக்கல் சூழலில் அதிகரித்து வரும் விலைவாசி உயர்வு, பணவீக்கம் ஆகியவற்றை அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான ஊதிய மாற்றம் மூலம் அதிகரிக்கும் என்று ஊடகங்களில் உண்மைக்கு மாறான கருத்து திணிப்பு பரவலாக முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. ஒன்றிய அரசின் தவறான பொருளாதார கொள்கைகளும், நிதி பங்கீடும், மாநில அரசுகள் நிதிப் பற்றாக்குறையை எதிர் கொள்ளும் நிலைக்கு ஆட்படுத்தியுள்ளன. அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கான ஊதியச் செலவு அரசின் நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வதற்கான முதலீட்டுச் செலவு என்ற அடிப்படையில் ஊதிய செலவுகளை ஈடுகட்டுவதற்கு ஒன்றிய அரசிடம் இருந்து GST உட்பட கூடுதலான நிதி ஒதுக்கீட்டை மாநில அரசு பெறுவதற்கான நிர்வாகம் மற்றும் அரசியல் ரீதியான நடவடிவக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் /ஜாக்டோ-ஜியோ பேரமைப்பும் கேட்டுக்கொள்கிறது.

14ஆம் மாநில மாநாட்டில் கலந்து கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நான் இருக்கிறேன். உங்கள் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தருகிறேன் என்ற புத்துணர்வு நம்பிக்கையை விதைத்திருக்கிறீர்கள். அது மட்டுமல்ல. "அரசு ஊழியர்கள் தான் அரசாங்கம்", என்னை திரும்பி பார்க்க வைக்க வேண்டிய அவசியம் உங்களுக்கு இல்லை. ஏனென்றால் "நான் உங்களில் ஒருவன்" என்றெல்லாம் விண்ணதிர நீங்கள் உதிர்திட்ட ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு அரசு ஊழியர், ஆசிரியரின் நெஞ்சிலும் எழுதப்பட்ட செப்பேடுகளாய் நிற்கின்றன. அரசு ஊழியர்கள் வரலாற்றில் பத்தாண்டு கால இருண்ட ஆட்சி மறைந்து ஒன்றரை வருட காலமாக மக்களின் மனசாட்சி ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. குறிப்பாக நீட் தேர்வு, புதிய கல்விகொள்கை கைவிட வேண்டும், அனைத்து சாதியினரும் அர்ச்சகர், பெண்களுக்கு இலவச பேருந்து பயணம், இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், நான் முதல்வன் என பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து ஏதாவது ஒரு நெருக்கடி அரசாங்கத்திற்கு வந்து கொண்டிருந்தாலும் நிதி நிலை மோசமாக இருப்பதாலும் அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் உள்ளது. (குறிப்பாக) சமூக பாதுகாப்பாக இருக்கக்கூடிய பழைய ஓய்வூதியத் திட்டம், சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம் பெறும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம், சரண் விடுப்பு, மத்திய அரசு வழங்கியதுபோல் 21 மாத நிலுவை ஊதியம், அரசுத்துறைகளில் 4 1/2 லட்சம் காலி பணியிடம் பூர்த்தி செய்தல், ஆசிரியர்களுக்கு ஊதிய மாற்றம் உள்ளிட்ட கோரிக்கை அனைத்தும் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்ற தங்களின் வெளிப்படையான பேச்சு யாதார்த்தமானது என்பதை அறிவோம். அதனால் தான் எங்கள் உரிமைகளுக்காகவும், சலுகைகளுக்காகவும் பொறுமையுடன் காத்திருக்கிறோம்.

எங்களது கோரிக்கைகள் அனைத்தையும் ஒரே நாளில் தங்களால் முழுமையாக நிறைவேற்ற முடியாது என்கிற யாதார்த்தத்தை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அதே சமயம் எங்களது நியாயமான கோரிக்கைகளில் சிலவற்றை ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் தாங்கள் நிறைவேற்றி அரசாணை வெளியிட வேண்டுகிறோம். இதன் மூலம் அரசாங்கத்தின் சுமைகள் கொஞ்சம் கொஞ்சமாக குறைவதோடு அரசு ஊழியர், ஆசிரியர்கள் அரசுப் பணிகளில் மக்கள் நல திட்டப்பணிகளிலும் இன்னும் ஊக்கத்துடன் உற்சாகத்துடன் செயல்படுவார்கள். தமிழக அரசு முழு வீச்சில் பயணிக்க அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உழைப்பவர்கள். துணை நிற்பவர்கள் என்று தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநாட்டில் பல்வேறு துறைகளில் பணிபுரியும் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை தொகுத்து தங்களிடம் வழங்கி

இருக்கிறோம். அதை தொடர்ந்து 2022 ஆகஸ்ட் 1ம் தேதி ஜாக்டோ-ஜியோ சார்பிலும் சந்தித்து கோரிக்கைகளை கொடுத்திருக்கிறோம். அவற்றை பெற்றுக்கொண்டு அவற்றை பரிசீலிப்பதாக உறுதி அளித்தது அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை உற்சாகமூட்டியுள்ளது. அதேபோல் நிதிச்சுமை சாராத கோரிக்கைகளின் பேரில் முடிவெடுத்து நடவடிக்கை மேற்கொள்வதில் அரசுக்கு எந்தவிதமான இடர்பாடும் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே தற்போது உள்ள சூழ்நிலையில் தமிழக முதல்வர் அவர்கள் உடனடியாக நிதிச்சுமை இல்லாத நிர்வாக கோரிக்கைகளின் மீது உரிய முடிவெடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் முதல்வராக இருந்த எடப்பாடி திரு. பழனிச்சாமியிடம் ஆசிரியர், அரசு ஊழியர்களின் கோரிக்கை குறித்து பேசுவதற்கு 20 முறைகள் மனு கொடுத்தும் எங்களை சந்தித்து பேச முன்வாராதது அவர் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை எந்த இடத்தில் வைத்திருந்தார் என்பதற்கு ஒரு உதாரணமாகும்.

ஆனால் தங்களுடைய கட்சியும், தாங்களும் எங்களுடைய உரிமைகளுக்காக குரல் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சி அமைந்ததும் புதிய பென்சன் திரும்ப பெறுவது உள்ளிட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் குறைகளை பரிசீலித்து முடிவெடுக்கப்படும் என அறிவித்து எங்களுக்கு நம்பிக்கை அளித்துள்ளீர்கள். திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முதல்வராக இருந்த சமயங்களில் எல்லாம் அரசு ஊழியர்களுக்கும் சொல்வதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்திருக்கிறார். அதில் ஒரு சில 1988ல் 31 நாள் வேலை நிறுத்த காலம் பணிக்காலமாக உத்தரவிட்டார். அன்றைய காலத்தில் ஊழியர்களுக்கு பதவி உயர்வு போன்றவற்றிற்கு மிகப்பெரிய இடையூறாக இருந்த ரகசிய குறிப்பேடு, இதனால் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் பாதிப்பிற்கு உள்ளானார்கள். இந்த அடிமைச் சங்கலியை தனது ஆட்சி காலத்தில் கலைஞர் உடைத்தெறிந்தார். கருணை அடிப்படையில் நியமனம் பணியில் இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு அன்றைய நிலையில் ரூ.10,000/- வழங்கி பாதித்த குடும்பத்தை பாதுகாத்தார். 2003ல் நடத்ந வேலை நிறுத்ததில் டெஸ்மா மூலம் 1.76 லட்சம் பேர் பணி நீக்கம் செய்யப்பட்டபோது நமது சங்க நிர்வாகிகளை அழைத்து உங்களுக்கு உறுதுணையாக இருப்பேன் கவலை வேண்டாம் என தைரியமூட்டினார். 1984ல் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முதல் மாநாடு சென்னையில் நடந்தபோது அந்த மாநாட்டில் டாக்டர் கலைஞர் அவர்கள் பங்கேற்று அரசு ஊழியர்களது ஊதியம், நிர்வாக சீர்திருத்தம் ஆகியவற்றை அவ்வப்போது எண்ணிப்பார்த்துக் செயல்பட நிரந்தரமான சம்பள கமிஷன் அமைத்திட வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். அந்த வகையில் தாங்களும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் வாழ்வாதார நம்பிக்கை மாநாட்டில் பங்கேற்று எங்களது கோரிக்கைகளை பரிசீலித்து ஆவண செய்வீர்கள் என்ற முழு நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

பொதுவாக பறிக்கப்பட்ட உரிமைகளை மீளப் பெறுவதற்கு கூட்டு இயக்கங்கள் என்பது அவசியம். அந்த வகையில் இந்தியாவிலேயே ஜாக்டோ-ஜியோ அமைப்பு ஆகப் பெரிய கூட்டமைப்பு ஏற்படுத்தி ஆசிரியர், அரசு ஊழியர்களின் மிகப்பெரிய நம்பிக்கையை பெற்றுள்ளது. அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்ற வகையில் தமிழக தொழிற்சங்க வரலாற்றில் இதுவரை கூட்டு இயக்கமாக மாநாடுகள் நடைபெற்றதில்லை. இதுதான் முதல் முறையாக ஜாக்டோ-ஜியோ சென்னை தீவுத்திடலில் 2022 செப்டம்பர் 10ஆம் தேதி வாழ்வாதார நம்பிக்கை மாநாடு மிக பிரம்மாண்டமான முறையில் நடைபெறுகிறது. அம்மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள். எனவே தோழர்களே நாம் எதிர்கொள்ளும் அனைத்து பிரச்சினைகளுக்கும், கோரிக்கைகளுக்கும் தீர்வு காண வாழ்வாதார நம்பிக்கை மாநாடு ஒரு விடியலாய் அமையும் என்ற அடிப்படையில் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் பல லட்சக்கணக்கானோர் பங்கேற்று நமது கூட்டு இயக்கத்தின் வலிமையை காட்டிட படையென திரள்வோம் செப்டம்பர் 10ல்.... சென்னையில்...

ஒன்றுபடுவோம் ! போராடுவோம் !! முன்னேறுவோம்!!! ●

# நமுது போராட்டம் இப்போதான் துவங்கியுள்ளது!

- சி . பரமேஸ்வரி

பெண் என்ற தாய்மையில் இருந்து தான் இந்த உலகின் உயிர்கள் அனைத்தும் தோன்றுகின்றன. ஒரு வெற்றிகரமான சமூகம் உருவாகுவதற்கு பெண்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.

“பெண்ணுரிமை இல்லாத நாடு

காற்றில்லாத வீடு”

என்றார் தோழர் லெனின். பெண்கள் பிரெஞ்சி புரட்சியின் போதே தனக்கான சம உரிமைக்காக குரல் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். சரி பெண்கள் உண்மையிலேயே தனக்கான உரிமையை பெற்றுவிட்டார்களா? சுதந்திர உணர்வோடு தான் வாழ்கிறார்களா? என்று கேட்டால் அதற்கு எப்போதும் பதில் பெரிய கேள்வி குறி தான் பெண் என்பவள் ஆண்களை விட பலவீனமானவள் என்ற கருத்து எப்போதும் பரவலாக உள்ளது. ஆனால் ஒரு பெண் சமூகத்தில் பல வேடங்கள் எடுக்கிறாள். குழந்தைகளுக்கு தாயாகவும், கணவனுக்கு மனைவியாகவும், பெற்றோருக்கு நல்ல மகளாகவும் சகோதர்களுக்கு அன்பான சகோதரியாகவும், மாணவர்களுக்கு அன்பான ஆசிரியையாகவும், மருத்துவர்களாகவும் பல துறைகளிலும் வாழ்வின் அனைத்து துன்பமான நேரங்களில் ஆண்களுக்கு துணையாக பெண்கள் இருக்கிறார்கள் இத்தகைய பெண்கள் ஒரு சிறந்த சமூகம் ஒன்றை கட்டமைக்கின்றார்கள்.

“பெண்ணில்லா ஊரில் பிறந்தவர்கள் அன்பின் இலக்கணம் அறியாதவர்கள் என தமிழ் இலக்கியங்களில் கூறப்படுகிறது.”

ஒரு பெண்ணிடம் தன் கணவர் என்ன வேலை செய்கிறார் என்று கேட்டால் தன் கணவர் வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்தாலும் அவரை விட்டுக் கொடுக்காமல் Business என்று கூறுகிறாள். ஆனால் ஒரு ஆணிடம் மனைவி என்ன வேலை செய்கிறாள் என்று கேட்டால் சும்மாதான் இருக்கிறாள் என்று கூறுவார். ஒரு பெண், கோழி கூவுவதற்கு முன் எழுந்து இரவு எல்லாரும் உறங்கிய பிறகு உறங்க போகும் ஒரு பெண்ணுக்கு கொடுக்கும் பட்டம் சும்மாதான் இருக்கிறார். வீட்டில் இருக்கும் பெண்ணுக்கு எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் மிகையாகாது. இதுதான் இன்றைய சமூக நிலை. இந்நிலை மாற வேண்டும்.

“ஏட்டையும் பெண்கள் தொடுவது

தீமையென்

றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி

வைபோ மென்ற”விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

என்ற முண்டாசு கவிஞர் பாரதியின் கனவு நிஜமாகிவிட்டது.

இன்று பெண்களால் இல்லாத துறையே இல்லை. மண்ணிலிருந்து விண் வரை அனைத்து துறைகளிலும் முன்னேறி தன் வசப்படுத்தும் ஆற்றல் பெற்றுள்ளார்கள். இந்த உலகையே தன்வசப்படுத்தும் பெண்கள் தான், பாலியல் வன் கொடுமைகளை அனுபவிக்கின்றனர். குடும்ப வன்முறையால் குழந்தைகள் முதல் மூதாட்டி வரை பாதிக்கப்படுகின்றனர். இன்று போடும் ஆடைகளை விமர்சனம் செய்வோர் பெண்கள் பாதுகாப்பிற்கு வழி செய்வதில்லை ஆக ஆடை என்பது உடை என்பதை தவிர அதில் ஒன்றும் இல்லை கலாசாரத்தையும் பண்பாட்டையும் ஆடையை வைத்து நிர்ணயிப்பது அர்த்தமற்ற செயல். பெண் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டால் பெண் குழந்தைகளுக்கு Good touch, Bad

*touch* என்று சிறு வயது முதல் சொல்லி கொடுத்து வளர்க்க வேண்டும். பெண்கள் மாராப்பு சேலை அணிவதற்குகூட 38 ஆண்டு காலம் போராடி அச்சுதந்திரத்தை பெற்றார்கள்.

ஆண்கள், பெண்கள் தொடர்பான நன்மதிப்பை கடைபிடித்தால் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறையும். இன்று பாலியல் துன்புறுத்தலால் பள்ளி, கல்லூரி, அரசு அலுவலகங்களிலும், தனியார் அலுவலங்களிலும் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. அதேபோல் குடும்ப வன்முறை அதிகரித்துள்ளது. லட்சக்கணக்கான பெண்களை பாலியல் துன்புறுத்தலில் இருந்து பெண்களை பாதுகாப்பதற்கான ஒரு பயிற்சி பட்டறை தான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மகளிர் மாநாடு. அதோடு இன்று அரசு துறைகளில் 50% மேல்பெண்கள் பணியாற்றுகிறார்கள் அதுவும் பெருவாரியாக பெண்களே பணிபுரியும் துறைகளான சத்துணவு, அங்கன்வாடி, MRB செவிலியர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் ஆகும். மாண்புமிகு தமிழக முதல்வர் எதிர் கட்சி தலைவராக இருந்த போது கழக அரசு ஆட்சிக்கு வந்தால் சத்துணவு, அங்கன்வாடி, MRB செவிலியருக்கு கால முறை ஊதியம் வழங்குவேன் என்று கூறினார். அதேபோல் தேர்தல் வாக்குறுதியிலும் தெரிவித்துள்ளார். எனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் வேண்டும் என்று இம்மாநாட்டின் மூலம் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேபோல் எந்த மாநிலத்திலும் எந்த துறையிலும் இல்லாத நிகழ்வு பொது சுகாதார துறையில் ஆண் பெண் பாலின பாகுபாடு நிலவுகிறது. ஆண்கள் (சுகாதார ஆய்வாளர்) பெண்கள் (கிராம சுகாதார செவிலியர்கள்) ஆணுக்கு ஒரு ஊதியம் பெண்ணுக்கு ஒரு ஊதியம் என்று உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பாலின பாகுபாட்டை களைந்து சமநிலையான ஊதியம் வழங்கி பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்று இம்மாநாட்டின் மூலம் கேட்டுக் கொள்கிறோம். உலகத்தின் தலை சிறந்த நாடுகள் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தேவைகள் மற்றும் வேலைவாய்ப்புகள் சுதந்திரம், பாதுகாப்பு என்பன தொடர்பாக அதிகம் கவனம் எடுக்கின்றன. இந்த நாடுகளின் வளர்ச்சியில் பெண்கள் பெரும் பங்காற்றுகின்றன. உலகளவில் இந்த நாடுகளில் அரசியல் தலைவர்களாகவும், நிறுவன தலைவர்களாகவும் பெண்கள் மாறிவருகின்றனர். இவ்வாறான வளர்ச்சி ஆண்களில் சுமையை வெகுவாக குறைத்து ஒரு ஆரோக்கியமான சமுதாய வளர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றது. இவற்றை எமது தேசமும் உள்வாங்கி பெண்களை பாதுகாக்கவும், வளர்ச்சியடைய செய்யவும் செயற்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. போராடுவதை, உருவாக்குவதை, எதிர்ப்பதை தொடர்ந்து செய்யுங்கள், ஒரு போதும் பின் வாங்க வேண்டாம். நமது போராட்டம் இப்போதுதான் தொடங்கியுள்ளது. நாம் தான் எல்லாமே, இந்த உலகிற்கு பெண்களின் சக்தி தேவைப்படுகிறது. ●

## "பஞ்ச்"

மொரப்பா

**உழைப்பவனைத்
தேடி கண்டுபிடித்து
இயக்கம்
நடத்தினால்தான்
பலனுண்டு.
கிடைத்தவனைக்
கொண்டு நடத்தினால்
பலனில்லை.
– அறிஞர் அண்ணா.**

# செம்மை மாதரும் திமிர்ந்த ஞானச் செருக்கும்!

- உ.சிவப்பிரியா

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநில மகளிர் மாநாடு ஆகஸ்ட் 13, 2022. கிருஷ்ணகிரி*

*வரவேற்புரை: முனைவர். உ. சிவப்பிரியா, வரவேற்புக் குழுத்தலைவர், மாநிலத் துணைத் தலைவர் (மகளிர்), தமிழ்நாடு அரசுக் கல்லூரி ஆசிரியர் கழகம்.*

"எங்கள் வாழ்வும்
எங்கள் வளமும்
மங்காத தமிழென்று
சங்கே முழங்கு" என்று என் அன்னைத் தமிழை வணங்கி,

"எந்தையும் தாயும்
மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே
அதன் முந்தையர்
ஆயிரம் ஆண்டுகள்
வாழ்ந்து முடிந்ததும்
இந்நாடே!

அவர் சிந்தையில்
ஆயிரம் எண்ணம்
வளர்ந்து சிறந்ததும்
இந்நாடே!
இதை வந்தனைக் கூறி
மனதில் இருத்தி
என் வாயுற
வாழ்த்தேனோ!

இதை வந்தே மாதரம்
வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?

என்று என் பாரதத் தாயையும் வணங்கி

பெண்களின் உரிமைகளை, உணர்வுகளை பிரச்சனைகளை, அழுத்தமாக மனம் திறந்து பேச ஒரு களமாகவும், பணிபுரியும் பெண்களின் மாண்பையும், சம வாய்ப்பு, சம ஊதியம், பணியிடங்களில் அவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள், பெண் உழைப்புச்சுரண்டல், போன்று மொத்தத்தில் பெண்களுக்கான சமூக அநீதிகளைக் களைவதற்கான, மகளிரின் உரிமை மீட்பு மாநாடாக, தமிழகத்தையே கிருஷ்ணகிரியை நோக்கித் திருப்பிப் பார்க்க வைக்கின்ற அளவில் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மகளிர் மாநில மாநாட்டிற்கு வருகை புரிந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் எழுச்சி மிகு வீரஞ்செறிந்த வணக்கங்களை உரித்தாக்கிக் கொள்வதில் உளபடியே நான் உளம் மிக மகிழ்கிறேன்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின், மகளிர் மாநில மாநாட்டினை, "நடத்தும் இடமாக" "கிருஷ்ணகிரியைத்" தேர்வு செய்தமைக்காக, முதற்கண் மாநில அமைப்பிற்கு கிருஷ்ணகிரியைச் சார்ந்த அனைவரின் சார்பாகவும் மேலான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி, முற்காலத்தில் தமிழகத்தின் எல்லையாக விளங்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெருங்கற்கால மக்களின் பாறை ஓவியங்கள், இறந்தோருக்கான கல்திட்டை, பெருங்கற் குகைகள், போரில் வீரமரணம் அடைந்தவர்களுக்காக, சங்க காலத்தில் அமைக்கப்பட்ட ஏராளமான நடுகற்கள், பல்வேறு பண்டைய அரசர்களின் கல் வெட்டுகள், ஆகிய நினைவுச் சின்னங்கள் கிருஷ்ணகிரியின் தொன்மைச் சிறப்பைப் பறைசாற்றுகின்றன. 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த நீதிமன்றமும் கிருஷ்ணகிரியில் மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த தர்மபுரி, மாவட்டத்திலிருந்து பிரிந்து கிருஷ்ணகிரி மாவட்டமானது 09.02.2004-ல் தமிழகத்தின் 30-வது தனி மாவட்டமாக உதயமானது. கிருஷ்ணகிரி மாவட்டமானது

கிழக்கே திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களையும், மேற்கே கர்நாடக மாநிலத்தையும், வடக்கே ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலத்தையும் வரையரை எல்லையாகக்கொண்டு, பன்முகக் கலாச்சாரத்துடன் "மாங்கனி நகர்" என்று கிருஷ்ணகிரியும், மலர் உற்பத்தியில் ஒசூரும், கிரானைட்-உற்பத்தியிலும் சிறந்து விளங்குகிறது.

எனினும் ஆரம்ப காலங்களில் (ஒருங்கிணைந்த மாவட்டங்களாக இருந்தபோது) "பெண் சிசுக் கொலை, குழந்தைத்திருமணம், போன்று பெண்கள் முன்னேற்றத்திலும், கல்வியிலும் பின் தங்கி இருந்த போதும், தற்போது அரசு மற்றும் பல்வேறு அமைப்புகளின் தொடர்ந்த விழிப்புணர்வுப் பணிகளின் காரணமாய்,

"பெற்றநல் தந்தை தாய் மாரே நும்
பெண்களைக் கற்க வைப்பீரே".
இன்றை நாள் பெண் கல்வியாலே
முன்னேற வேண்டும் வையமேலே"

என்ற பாரதிதானின் கூற்றுக்கேற்ப கிருஷ்ணகிரியிலும் அதனைச் சுற்றியும் ஏற்படுத்தப்பட்ட, பெண்கள் பள்ளிகள், கல்லூரிகள், ஆகியவையினால் அதிகரித்த பெண்கல்வி சதவீதத்தினால், பெண் கல்வியினால், பெண்களுக்கு எதிரான குற்றங்கள், முன்பு இருந்ததைவிட குறைந்திருக்கின்றன என சொன்னால் அது மிகையில்லை. ஆனாலும் ஆங்கிலக் கவிஞன் ராபர்ட்ஃபயஸ் சொன்னதுபோல நாம் இன்னும் செல்லவேண்டிய தூரம் அதிகம் உள்ளது. இங்குள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயின்ற பெரும்பான்மை மாணவிகள் அரசு நடத்தும் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றி கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு கூடுதலாகப் பெருமை சேர்க்கின்றனர்.

நிமிர்ந்த நன்னடையும்
நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்
அமிழ்ந்து பேரிருளாம் அறியாமையில்
அவலம் எய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறம்
ஆகுமாம் என்ற பாரதியின் கூற்றிற்கேற்ப

எல்லாப் பெண்ணறத்தையும் தன்னகத்தேக் கொண்டு, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த "மாநில மகளிர் மாநாட்டினை" தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும், மகளிர் துணைக் குழுவின், மாநில அமைப்பாளர் தோழர். சி. பரமேஸ்வரி அவர்களை அனைவரின் சார்பாகவும் வருக வருக என வரவேற்கிறேன்.

"ஆண் உயர்வென்பதும்
பெண் உயர்வென்பதும்
நாணிலத் தெங்கனும் இல்லை,
வாணிகம் செய்யலாம் பெண்கள்
வானூர்தி ஓட்டலாம் பெண்கள்
நல் ஏணை அசைத்தலும் கூடும்
அதையார் அசைத்தாலும் ஆடும்".

என்று பாரதிதாசனின் கூற்றிற்கு ஏற்ப, பெண்களின் சிந்தனையை வலுவாக்கிக் கொண்டிருக்கும் ஜனநாயக மாதர் சங்கம், அனைத்துத் தரப்புப் பெண்களையும் பொதுப் பிரச்சனைகளுக்காகப் போராட வீதிக்கு வரவைக்கும் வகையில் செயலாற்றி வருகின்றது. இன்னும் பல ஊர்களில் பெண்கள் யாராவது பாதிப்புக்கு உள்ளாகிவிட்டால், உடனே மாதர் சங்கத்திடம் சொல்லுங்கள் எனும் அளவிற்கு, சிதம்பரம் பத்மினி வழக்காகட்டும், உத்தப்புரம் தீண்டாமைச் சுவர் அகற்றும் போராட்டம் ஆகட்டும், பலப் பலச் சமூக விடுதலைப் போராட்டங்களை நடத்தி, சாதி, மத, இனம், பாகுபாடு, பாலினப் பாகுப்பாட்டுக்கு எதிராகவும் தொடர்ந்து இயங்கி, நாட்டில் சமமற்ற, சமூகப் பொருளாதார தளத்தில் மாற்றத்தை உண்டாக்கப் போராடி வரும், அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் அகில இந்தியத் துணைத் தலைவர். தோழர் உ. வாசுகி அவர்களை நம் அனைரின் சார்பாகவும் வருக வருக என வரவேற்று மகிழ்கிறேன்.

"மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடுமணக்க வந்த கற்பூரப் பெட்டகமே
வேண்டா சாதி இருட்டு வெளுப்பதற்கு
தூண்டா விளக்காய் துலங்கும் பெருமாட்டி!
புண்ணிற் சரம் விடும் பொய் மதத்தின்
கூட்டத்தைக் கண்ணிற் கணல் சிந்தி,

கட்டழிக்க வந்தவளே,'' என்ற பாரதிதாசனின் கூற்றுப்படி, சட்டத்தின் துணைகொண்டு,

தான் சார்ந்த நீதித்துறை மட்டுல்லாது, சமூக நலத்துறை, காவல், இளைஞர் மேம்பாடு என தொடர்ந்து பேசியும், எழுதியும், செயல்பட்டுக் கொண்டிருக்கும், சென்னை உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு, மேனாள் நீதியரசர், தமிழ்நாடு சட்ட ஆணைய உறுப்பினர், பெண்ணினப் பாதுகாவலர் மேனாள் நீதியரசர் முனைவர் எஸ்.விமலா அவர்களை நம் அனைவரின் சார்பாகவும் வருக வருக என வரவேற்று மகிழ்கி;றேன்.

“பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்,
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்!
பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்
பேதமை யற்றிடும் கண்டீர்!

என்று பெண்களின் கல்வியை, அறிவை வளர்ப்பதின் மூலம் பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்குத் தீர்வு காண்பது, பெண்களுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்குகளை விசாரித்தல், பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்தல், பணிபுரியும் பெண்களுக்கு எதிரான அனைத்து வகை இன்னல்களில் இருந்தும், குடும்பத்திலும், சமுதாயத்திலும் பெண்கள் எதிர் கொள்ளும் பொதுவான மற்றும் தனிப்பட்ட பிரச்சனைகளில் இருந்தும் பெண்களைப் பாதுகாக்கத் தேவையான சட்ட அதிகாரங்களைப்பெற்ற அமைப்பாகத் தொடர்ந்து செயல்பட்டு வரும், தமிழ்நாடு மகளிர் ஆணையத் தலைவர், திருமதி யு.ளு. குமரி அவர்களை நம் அனைவரின் சார்பாக வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

“பெண்மை அறிவுயிரப் பீடோங்கும் பெண்மைதான்

ஒண்மையுற ஓங்கும் உலகு''

என்ற பாரதியின் கூற்றுப்படி, ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்று தன் சேவைகளினாலும், செயல்களாலும் சமூகத்திற்கு நல்ல எடுத்துக்காட்டாய் விளங்கி, அரசின் அத்தனை நலத்திட்டங்களையும் உடனுக்குடன் மக்களுக்கு எடுத்துச் சென்று, சிறந்த ஒரு பணியை ஆற்றிக் கொண்டிருக்கும் கிருஷ்ணகிரி மாவட்ட சமூக நலத்துறை அலுவலர், திருமதி. கா. விசயலட்சுமி, கிருஷ்ணகிரி மாவட்டம், அவர்களை நம் அனைவரின் சார்பாகவும் வருக வருக என வரவேற்று மகிழ்கிறேன்.

மேலும் இம்மாநில மகளிர் மாநாட்டினை தமிழகத்திற்கே ஒரு முன்மாதிரி நிகழ்வாக அமையும்படி எல்லா வகைகளிலும் வழிகாட்டி, வழிநடத்தும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர், தோழர். மு. அன்பரசு அவர்களையும், மாநிலப் பொதுச்செயலாளர் தோழர். ஆ. செல்வம் அவர்களையும், தோளோடு தோள் இணைந்து செயலாற்றிக் கொண்டிருக்கும் செயல் வீரர்கள்.

துணைப் பொதுச் செயலாளர். தெ. வாசுகி அவர்களையும், மாநிலத் துணைத் தலைவர்கள் தோழர். கோ. பழனியம்மாள் மற்றும் தோழர். மு. செல்வராணி அவர்களையும், மாநிலத் செயலாளர்கள் தோழர். உ. சுமதி மற்றும் தோழர். ச. ஹேமலதா அவர்களையும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டின் நன்றியுரை ஆற்ற இருக்கும், மகளிர் துணைக்குழுவின் மாவட்ட அமைப்பாளர். தோழர் கே. ஜெகதாம்பிகா அவர்களையும்.

அனைத்திற்கும் மேலாக, கிருஷ்ணகிரி மாவட்ட அரசு ஊழியர் சங்கத்தின் தூண்களாக,

மெய் வருத்தம் பாராமல்,
கண் துஞ்சாமல்,
செவ்வி அருமையும் பாராமல்

கருமமே கண்ணாக - பணியாற்றிக் கொண்டிருக்கும்

தோழர். பி. சந்திரன் அவர்களையும், தோழர். ஆர். நடராசன் அவர்களையும், அனைவரின் சார்பாகவும் வருக வருகவென வரவேற்கிறேன்.

இந்த மகளிர் உரிமை மீட்டெடுப்பு மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்க, தமிழகம் முழுவதிலும் இருந்து அலைகடலென திரண்டு வந்திருக்கும், அரசு ஊழியர், சொந்தங்களையும், ஊடக நண்பர்களையும், மேலும் இம்மகளிர் மாநாடு சிறப்பாக நடைபெற எல்லா வகைகளிலும் உதவிக் கொண்டிருக்கும் அனைத்து நல் உள்ளங்களையும் வருக வருக வருகவென வரவேற்று இடம் சார்கிறேன்.

நன்றி வணக்கம்.
பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா!
பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா!

●

# ரப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல!

**- தெ.வாசுகி**

உலகத்தில் நான் பிறந்ததும் பார்த்த முதல் பெண் எனது தாய்தான். ஆனால் உலகின் முதல் பெண்கள் என்று சொல்லக் கூடிய சாதனைப் பெண்களின் நிலை என்ன மாதிரியான சவால்கள் நிறைந்தது எனத் தெரியுமா? நமக்கெல்லாம் தத்துவம் என்றாலே கிரேக்கம் என்றும் தத்துவ ஞானி என்றாலே ப்ளாட்டோ, சாக்ரடீஸ், அரிஸ்டாட்டில் என்றும் தான் ஞாபகத்திற்கு வரும். அப்படித்தான் நமக்கு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கற்பிக்கப்பட்டது. கிரேக்க நாட்டின் முதல் பெண் தத்துவஞானி "ஹைப்பேஷியா" வின் அறிவும் புலமையும் அபாரமானது. இயல் கணிதம், எண்கணிதம், மொழியியல், மற்றும் வானியல் ஆகிவற்றில் அபார அறிவுத்திறமையும் அதற்கான ஏராளமான புத்தகங்களையும் எழுதியுள்ளார். கி.பி.415 மார்ச் 8ஆம் நாள் கிறித்தவ மதபோதகர் ஒருவரால் ஏவப்பட்ட கொலைவெறி தலைக்கேறிய கும்பலால் ஹைப்பேஷியாவின் ஆடைகள் அவிழ்த்து எறியப்படுகிறது. உடல் முழுவதும் வெறும் கைகளாலும், கற்களைக்கொண்டும், சிப்பிகளைக் கொண்டும் உயிரோடு துள்ளத் துடிக்க அவரின் சதைகள் பிய்த்து வீதியில் வீசப்படுகிறது. அரைகுறை உயிரோடிருந்த அவரை தரதரவென்று வீதியில் இழுத்துச்சென்று கை கால்களை பிய்த்து கொடூரக் கொலை செய்து அவரது உடலை எறித்தனர். உலகின் சிறந்த வானவியலாளரான இவருக்கு மரியாதை செய்யும் விதமாக 1884 ல் விண்வெளியில் செவ்வாய் கிரகத்திற்கு அப்பால் உள்ள அஸ்டிராய்டு அடுக்கு வளையம் ஒன்றிற்கும், சந்திரனின் கிரேட்டர் பள்ளதாக்கு ஒன்றிற்கும் ஹைப்பேஷியாவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவரது கதை அகோரா என்ற பெயரில் 2009 திரைப்படமாக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கி.மு. 400 - 300 களில் பெண்கள் மருத்துவம் படிக்க அனுமதிக்காத காலத்தில் பெண்கள் பிரசவத்திற்கு தாதியாகவும், காயங்களுக்கு கட்டுப்போடவும் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். உலகின் முதல் பெண் மகப்பேறியல் மருத்துவரான "ஆக்னோடைஸ்" ஏதென்ஸில் கி.மு 300ல் பிறந்தார். இவர் தன்னை ஆணாக மாற்றிக்கொண்டு மகப்பேறியல் மருத்துவம் படித்து பெண்களுக்கு பிரசவம் பார்த்தார். ஆரம்பத்தில் ஆண் மருத்துவர்களால் மட்டுமே பிரசவம் பார்க்கப்பட்டதால் கூனிக் குறுகிப்போன பெண்கள் மத்தியில் தன்னை ஒரு பெண் என அறிமுகப்படுத்திக்கொண்டு மகப்பெறு மருத்துவம் பார்த்தார் ஆக்னோடைஸ். பெண்ணுக்கு ஆண் மருத்துவர்களால் பிரசவம் பார்த்த அந்த காலகட்டத்தில் பெண்ணுக்கு பெண்ணே பிரசவம் பார்ப்பது பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. இவரின் புகழை பொருத்துக் கொள்ள முடியாதவர்கள் ஆண் உருவத்திலிருந்த ஆக்னோடைஸ் பெண்களை வசியம் செய்கிறார் என்று மருத்துவர்கள் குற்றம் சாட்டினர். நீதிமன்றத்தில் அவருக்கு கொலை தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது உயிர் தப்பிக்க தன்னுடைய உடைகளை களைந்து தான் ஒரு பெண்தான் என்று நீதிமன்றத்தின் முன் நின்றார். அதிர்ச்சியுற்ற மருத்துவர்களும் நீதிபதியும் அரசின் உத்தரவை மீறியதாக கடுங்கோபமுற்றனர். ஆனால் ஏதென்ஸ் நகரத்திலுள்ள பெண்கள் ஒன்றுகூடி ஆக்னோடைஸ் எங்களை காப்பாற்றியவர். அவர் மருத்துவத்தை தொடரவேண்டும். மீறி அவருக்கு கொலை தண்டனை விதித்தால் நாங்களும் செத்துபோவோம் என்ற பெண்களின் ஒன்றுபட்ட போராட்டம் வென்றது. நீதிமன்றம் ஆக்னோடைஸை விடுவித்தது.

நமது இந்தியாவில் 1730ல் ஜோத்பூர் அரசர் அரண்மனை கட்டுவதற்காக மரங்கள் தேவைப்படுவதால் மரம் வெட்டுவதற்கு ஆட்களை அனுப்புகிறார். அப்போது அமிர்தா தேவி எனும் பெண் மரம் வெட்டுவதை தடுத்து வெட்டவரும் மரத்தை கட்டிப்பிடித்துக்கொண்டு மரம் வெட்டினால்

மனிதகுலத்திற்கு ஏற்படும் பின்விளைவுகளை பற்றி கூறினார். அவரின் பேச்சை பொருட்படுத்தாமல் மரம் வெட்டுபவன் அந்தக் கோடாரியால் மரத்துடன் சேர்த்து அமிர்தா தேவியை வெட்டினான். இதை அறிந்த ஊர்மக்கள் ஒன்றுகூடி போராடியதை கண்ட அரசர் மரம் வெட்டுவதற்கு தடை விதித்தார். இயற்கை வளங்களை பாதுப்புக்காப்பதற்கான விழிப்புணர்வை மனித குலத்திற்கு உணர்த்திய முதல் பெண் நடத்திய போராட்டமாகும். இதுவே 1973 உத்தரகாண்டடில் சிப்கோ இயக்கத்திற்கும் காரணமாயிற்று.

ஆசிரியர் தினம் என்றாலே டாக்டர் ராதாகிருஷ்ணன் தான் நினைவுக்கு வருவார். முதல் பெண் ஆசிரியர் சாவித்திரிபாய்புலேவை பற்றி நம்மில் எத்தனை பேர் பாடபுத்தகத்தில் படித்திருப்போம்? சாவித்திரிபாய்புலே மராட்டிய மாநிலத்தில் 1831 ல் பிறந்தவர். பெண்கள் கல்வி கற்க கூடாது என்ற சநாதனம் மிகுந்த காலகட்டத்தில் பெண்ணடிமைத்தனம் தீர பெண்கள் கல்வி கற்க வேண்டும் என நினைத்தார். அதனாலேயே பெண் குழந்தைகளுக்கு கல்வி புகட்ட வேண்டும் என்று 9 பெண் குழந்தைகளை படிக்கும் ஒரு பள்ளிக்கு தலைமை ஆசிரியரானார். ஆறே மாதத்தில் அப்பள்ளியை மூடினர். வேறோரு இடத்தில் பள்ளி தொடங்கினார். அவ்வூர் பழமைவாதிகளும், மேல் சாதியினரும் கடுமையாக எதிர்த்தனர். அவர் மீது சேற்றினையும், மலத்தையும் வீசினர். அவர் பள்ளிக்குச் செல்லும் பொது கூடவே ஒரு சேலை கொண்டு செல்வார். பள்ளிக்குச் சென்றதும் சேறு வீசப்பட்ட உடையை மாற்றி தான் கொண்டு வந்த இன்னொரு சேலையை உடுத்திக்கொண்டு பாடம் நடத்துவார். பெண்கல்விக்காக போராடிய முதல் பெண் போராளியாவார். இது போன்ற ஏராளமான போராட்டங்களையும்,துயரங்களையும் கடந்துதான் பெண்கள் முன்னேற்றப்பாதையில் பயணித்துக்கொண்டிருக்கிறார்கள்.

சங்க காலப் பாடல்களில் ஈன்று புறந்தருதல் பெண்களின் கடமையாகவும், எதிரிகளின் படையானைகளை வீழ்த்தும் ஒளிபொருந்திய வாளை வீசுவது இளைஞனின் கடமையென்றும் விவரிக்கிறது. அதே சமயத்தில் "வீரமிக்க மகனைப்பெற்ற என் வயிறு இதோ இருக்கிறது. புலி இருந்து நீங்கிய குகையினைப்போல அது கம்பீரமிக்கதாக" என்று கர்வம் கொள்ளும் தாய் குறித்து ஒக்கூர் மாசாத்தியார் பாடுகிறார். மற்றொருத்தியோ தன் மகன் போரில் புறமுதுகிட்டான் என்ற செய்தி கேள்விப்பட்டதும், செய்தி உண்மையெனில் அவனுக்கு பாலூட்டிய மார்பை அறுத்தெறிவேன் என்று சபதம் செய்கிறாள். இவையெல்லாம் பெண்ணிற்கு தாய்மை உணர்வையும், தாய்நாட்டை காக்கவேண்டிய கடமை உணர்வை மட்டும் முன்னிறுத்துவதாக உள்ளது. புராண காலத்து பாண்டவர்கள் யுத்தமுடிவிலும், இருபத்து ஓராம் நூற்றாண்டில் இலங்கை உள்நாட்டு யுத்த முடிவிலும் லட்சக்கணக்காண பெண்கள் விதவைகளாக்கப்பட்டார்கள் என்பதுதான் பெண்களுக்கு இழைக்கப்ட்ட அநீதி உலகின் யுத்த வரலாறுகள் அனைத்தும் இரத்தத்தாலும் விதவைகளின் கண்ணீராலும் நிரப்பப்பட்டவை தானே!

வரலாற்று நெடுகிலும் பெண்களுக்கு அநீதிகள்தான் இழைக்கப்படுட்டுள்ளது. மனித குல வரலாற்றிலேயே பெண்தான் முதலில் ஒடுக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டாள். நிலப்பிரபுத்துவ காலத்தில் பண்ணை அடிமைகள் மணம்புரிய வேண்டுமென்றால் "கட்டில் வரி" "கன்னியின் வரி" என்று விதித்தார்கள். பண்ணையடிமைக்கு பிறந்த குழந்தைகள் மீண்டும் பண்ணையடிமைகளாக்கப்பட்டனர். உலகில் உள்ள பெண்கள் அனைவருமே அவர்கள் எந்த வர்க்கத்தை சேர்ந்தவர்களானாலும், சமூகத்தில் எந்த மட்டத்தை சேர்ந்தவர்களானாலும் சமுதாயத்தின் வளர்ச்சிப்போக்கில் அவர்கள் ஒடுக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். இந்தியாவில் பெண் குழந்தை சுமையென கருதி கருவிலேயே அழிப்பதும், கள்ளிப்பால் கொடுப்பதும், வரதட்சினை (தற்)கொலைகள் நடப்பதும், பெண்குழந்தை பெற்றெடுத்தால் சொத்தின் வாரிசுக்காக ஆண்குழந்தைக்காக அவளது கணவன் மறுமணம் புரிவதும் என பல கொடுமைகள் நடந்துக்கொண்டுதான் இருக்கிறது.

விளையாட்டுத் துறைகளில் பாலின பாகுபாடு என்பது நிறைந்து காணப்படும்.

இருபாலரும் விளையாடக்கூடிய கிரிக்கெட், ஹாக்கி போன்ற விளையாட்டுக்களில் பெண்கள் எவ்வளவு சாதனை புரிந்தாலும் அவை மற்றவர்களால் ரசிக்கப்படுவதுமில்லை, போற்றப்படுவதுமில்லை.

பெண்கள் தங்களுக்கான உரிமைகள் ஒவ்வொன்றும் பல ஆண்டுகளாக போராடி பெறவேண்டிய நிலையிலேயே இருக்கின்றனர். கல்வி பெறும் உரிமை, சொத்துரிமை, ஓட்டுரிமை, வேலைநேரம், சமவேலைக்கு சம ஊதியம், திருமணம் செய்துகொள்ளும் உரிமை, பாலின சமத்துவம் போன்றவற்றிற்காக தொடர்ந்து போராடிக்கொண்டே தான் இருக்கிறோம். ஆண் பெண் இரண்டும் சேர்ந்தது தான் மனித இனம். ஆண்,பெண் இருவரது மூளைகளும் அவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியை பொறுத்தே சிந்திக்கிறது. சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமைகள், சம சலுகைகள், சம ஊதியம் என்பது குறைந்தபட்ச தேவையாக இருக்கிறது.

இந்தியாவை பாரதமாதா என்று அழைக்கின்றனர். ஆனால் பெண்களுக்கு பணிபுரியும் இடங்களில், பொதுவெளியில், நமக்கு எது பாதுகாப்பு என்று நினைக்கிறோமோ அதே குடுப்பத்தில் என எல்லா இடங்களிலும் பாலியல் துன்புறுத்தல்களும், குடும்ப வன்முறையும் நிறைந்து காணப்படுகிறது. இதை எதிர்கொள்ள வேண்டிய துணிச்சலை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். நாம் சமூக மாற்றத்தை குழந்தை வளர்ப்பிலிருந்து தொடங்க வேண்டும். பெண்ணுக்கு அறிவுரை சொல்லி வளர்ப்பதை விட ஆணுக்கு ஒழுக்கநெறிகளை சொல்லி வளர்க்க வேண்டும். பாலின சமத்துவத்தை நம்குடும்பத்திலிருந்து தொடங்க வேண்டும்.

"ரப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல" என்பது போல பெண்குல வரலாறு முழுவதும்காயங்களாலும் ரணங்களாலும் நிரப்பப்பட்டாலும், இச்சமூகத்தின் வளர்ச்சிக்காக, சமூக மாற்றத்திற்காக, பாலின சமத்துவத்திற்காக, பெண்கள் குழந்தைகள் மீதான வன்முறைகளுக்கெதிராக அவள் குரல்ஓங்கி ஒளித்துக்கொண்டே இருக்கும்!

பாலின சமத்துவத்தில் முன்னிலையில் இருப்பதாக கருதப்படும் அடிக்கும் ஐஸ்லாந்து, பின்லாந்து, டென்மார்க், நார்வே போன்ற நார்டிக் நாடுகளில் கூட்டு குடும்பத்தில் பாலின சமத்துமில்லையென ஒரு ஆய்வறிக்கை கூறுகிறது. வளர்ந்த நாடுகளை ஒப்பு நோக்கும்போது அந்நாடு வளர்ச்சியடைவதற்கு உழைக்கும் பெண்களின் பங்கு எத்தகையது என்பதை நாம் பார்க்கவேண்டும். ஒரு வீட்டின் வளர்ச்சிக்கு பெண்களின் அயராத உழைப்பு எவ்வளவு உறுதுணையாக இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். இன்றைக்கு வளர்ந்த நாடுகளின் வரிசையில் முன்னிலையில் இருக்கக்கூடிய அமெரிக்காவின் வளர்ச்சியில் உழைக்கும் பெண்களின் பங்கு 57 சதவீதம். பொருளாதாரத்தில் அதிவேகமாக வளர்ந்து அமெரிக்காவின் சிம்மசொப்பனமாக இருக்கும் சீனாவின் வளர்ச்சியில் பெண்களின் பங்கு 67 சதவீதம். சீனாவும், இந்தியாவும் கிட்டத்தட்ட ஒரே காலகட்டத்தில்தான் சுதந்திரம் பெற்றது. ஆனால் சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளில் இன்னும் இந்தியா பொருளாதாரத்தில் வளரும் நாடுகளில் ஒன்றாகவே இருக்கிறது என்பது வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலை. இந்தியாவின் வளர்ச்சியில் பெண்களின் பங்கு வெறும் 19 சதவிதம் தான்.

உலகிலேயே அதிக நேரம் உழைக்கும் பெண்கள் பட்டியலில் இந்தியாவில் பெண்கள் 80 சதவிதம் ஊதியமற்ற உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாகிறார்கள். ஆண்களுக்கு நிகராக பெண்களின் பங்கு இருந்தால் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 27 சதம் உயரும் என்று சர்வதேச நாணய நிதியம் (IMF) கூறுகிறது. இந்தியாவில் 75 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை கொண்டாடும் இவ்வேளையில் இந்தியாவை வளர்ச்சி நாடுகளுக்கு மத்தியில் வல்லரசாக்கும் திறன் பெண்களுக்கு தான் உண்டு என்பதை உரக்கச் சொல்வோம் தோழிகளே!

ரப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல! ஆண்டாண்டு காலமாக உழைக்கும் வர்க்க பெண்களின் போராட்டங்களும் புதிதல்ல! போராடி வெல்வோம்! நம் உரிமைகளை மீட்போம்! ●

# மங்காத நினைவுகளுடன் சங்கு முழங்கிய

# மகளிர் மாநில மாநாடு

**- ஆர்.நடராஜன்**

07.05.2022 அன்று சேலத்தில் நடைபெற்ற மாநில செயற்குழுவில் 2022 ஜூலை இறுதிக்குள் மகளிர் மாநில மாநாட்டை நடத்துவது என்றும், அதை கிருஷ்ணகிரியில் நடத்தலாம் என்றும் முன்மொழிவு வைக்கப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டத்தின் சார்பாக நம்பிக்கையுடன் துணிச்சலாக ஏற்றுக்கொண்டோம். ஆனால் அச்செயற்குழுவில் அதற்குப் பின்வைத்த இயக்கப்பணிகள் சார்ந்த முன்மொழிவுகளை பார்த்தபோது ஒரு சவாலான பாதையில் பயணித்துதான் மகளிர் மாநில மாநாட்டை நடத்த முடியும் என்று தோன்றியது. அன்றிலிருந்தே தேர்வுக்கு தயாராகும் மாணவர்கள் போல் செயல்பட முடிவெடுத்தோம்.

#### பெண் தோழரின் தலைமையில் வரவேற்புக்குழு

தொடர் போராட்டங்களை நடத்திக்கொண்டே மாநில மையத்தின் வழிகாட்டுதலோடு முதலில் வரவேற்பு குழு அமைத்து அதன் பிறகு பணிகளை தொடங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. மகளிர் மாநில மாநாட்டை நடத்திட அமைக்கப்படும் வரவேற்பு குழு தலைவரே ஒரு பெண் தோழராகத்தான் இருக்க வேண்டும், அவர் தலைமையில் அனைவரும் பணியாற்றுவது பொருத்தமாக இருக்கும் என்று முடிவெடுத்தோம்.

#### உற்சாகமூட்டிய வரவேற்புக் குழு

கிருஷ்ணகிரியில் உள்ள S.V.V. திருமண மண்டபத்தில் 11.06.2022 அன்று மாவட்ட தலைவர் தோழர் B.சந்திரன் அவர்கள் தலைமையில் வரவேற்பு குழு அமைப்பு கூட்டம் கூட்டப்பட்டது. மாநில நிர்வாகிகள், துறைச் சங்க பொறுப்பாளர்கள், வட்டக்கிளை நிர்வாகிகள் என நூற்றுக்கும் அதிகமானோர் பங்கேற்ற அக்கூட்டத்தில் வரவேற்புக் குழு தலைவராக தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்தின் மாநில துணைத்தலைவர் முனைவர். உ.சிவப்பிரியா Msc ,MPhil,PhD அவர்கள் நியமிக்கப்பட்டார்.தோழர் B.சந்திரன் செயலாளராகவும், தோழர் C. கோவிந்தராஜ் நிதிக் காப்பாளராகவும் நியமிக்கப்பட்டனர். அதில் 85 தோழர்கள் கொண்ட பல்வேறு துணைக்குழுக்களும் அமைக்கப்பட்டன. வரவேற்புக்குழு அமைக்கப்பட்டவுடனே மாநாட்டை சிறப்பாக நடத்துவதற்கு கிளைகளின் சார்பாகவும், துறைச் சங்கங்கள் சார்பாகவும், தனிநபர்களாகவும் ரூ. 1,02,000/- நன்கொடை மாநில நிர்வாகிகளிடம் வழங்கி ஊக்கப்படுத்தினர்.

#### தாமதமாய் துவங்கிய நிதி சேகரிப்புப் பணிகள்

மாநாட்டை நடத்துவதற்கான அரங்கத்தை முன்பதிவு செய்துவிட்டோமே தவிர நிதிசேகரிப்புப் பணிகள் ஜூன் -22 அன்றுதான் தொடங்கினோம். நிதி சேகரிப்பைப் பொறுத்தவரையில் அனைத்து ஊழியர்களிடமும் மகளிர் மாநாட்டின் முக்கியத்துவம் குறித்து பரப்புரை செய்து நிதி சேகரிக்க வேண்டும் என்று மாவட்ட செயற்குழு, விரிவடைந்த மாவட்ட செயற்குழு கூட்டி திட்டமிட்டோம். இது மகளிர் மாநில மாநாடு தானே என்று யாரும் சற்றும் விலகி சென்றுவிட முடியாதபடி அனைவரின் கவனமும் மகளிர் மாநில மாநாட்டை நோக்கி கவரக்கூடிய வகையில் பரப்புரை மேற்கொள்ள திட்டமிட்டோம். அனைத்து பகுதி ஊழியரின் ஒத்துழைப்பையும் எங்களால் பெற முடிந்தது.

#### புதிய அணுகுமுறையில் கிடைத்த புத்துணர்ச்சி.

வழக்கமாக அலுவலகங்களில் துண்டு பிரசுரம் விநியோகித்து, பரப்புரை செய்து நிதி

சேகரிப்பது ஒருபுறம் நடத்திக்கொண்டே சற்றே வித்தியாசமாக அணுகி பார்ப்போம் என்று ஊழியர்களை அவர்கள் வீடுகளுக்கே சென்று மகளிர் மாநாடு குறித்து பேசுவது என்று முடிவெடுத்து முதலில் சூளகிரி வட்டக்கிளையை தேர்ந்தெடுத்து பணிகளை துவங்கினோம். K.C.A.தினேஷ், K. ஜெகதாம்பிகா, K. கனகவள்ளி, K.சுலோச்சனா, S.K.தனலட்சுமி, S. வினோத், J.கவியரசன் ஆகியோர் கொண்ட குழுவுடன் பயணமானோம்.

நாங்கள் வீடுகளுக்குச் சென்றவுடன் அவர்கள் உறவினர்களைப்போல் வரவேற்று தேநீர், சிற்றிடை உணவு, குளிர்பானம், பழச்சாறு என்று நல்விருந்தோம்பி மாநாட்டிற்கு நிதியளித்த விதம் நமது அமைப்பிற்கு கிடைத்த பெரும் அங்கீகாரமாக கருதி அசந்துபோனோம். அந்த அனுபவங்களை முழுவதும் எழுதினால் பக்கங்கள் காணாது.

**அசர வைத்த அனுபவங்களில் ஒருசில....**

சின்னகானப்பள்ளி என்ற கிராமத்தில் சத்துணவு அமைப்பாளர் திருமதி. ஜமுனா அவர்களை சந்திக்கச் சென்றோம். அன்று அவர் வீட்டில் ஒரு மஞ்சள் நீராட்டு விழா. எங்களைக் கண்டதும் மொத்த குடும்பமும் வரவேற்று, எங்களுக்கு உணவு பரிமாறி மனைவி- கணவன் இருவரும் எங்களுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டு மாநாட்டிற்கு ரூ 3,000 /- நன்கொடை வழங்கி தாம்பூலப்பை கொடுத்து வழியனுப்பிவைத்தனர்.

ஓசூரில் வீடுகளுக்குச் சென்று ஊழியர்களை சந்தித்தபோது திக்குமுக்காட வைத்த நிகழ்வுகளும் நடந்தது. கிராம சுகாதார செவிலியர் தோழர் T. உதயபானு அவர்கள் வீட்டிற்குச் சென்ற எங்களை வரவேற்று குளிர்பானம் கொடுத்து அவர்கள் குடும்ப சகிதமாக உரையாடி பின்பு அனைவரும் ஒன்றாக புகைப்படம் எடுத்துக்கொண்டோம். மகளிர் மாநாடு குறித்து பேசி பிறகு நிதி வேண்டும் என்று கேட்டோம். எவ்வளவு வேண்டும் என்று கேட்டார். நீங்கள் மனமுவந்து எவ்வளவு கொடுத்தாலும் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருந்தபோதே உடன் வந்த தோழருக்கு ரூ 5,000/- கூகுள் பே செய்துவிட்டார். நீங்கள் மாநாட்டிற்கு ஒரு நாள் முன்பே வந்து பணிகளை செய்ய வேண்டும் என்று கூறிவிட்டு கிளம்ப தயாரானோம். "கொஞ்சம் பொறுங்கள்" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றார். 10 பார்சலுடன் வெளியே வந்து ஒவ்வொருவருக்கும் ஒரு பார்சல் கொடுத்தார்.

"இது என்ன தோழர் ?" என்று கேட்டதற்கு, "மாநாடு சிறப்பாக நடைபெற பணியாற்றும் உங்களுக்கு என் சிறிய அன்பளிப்பு. அனைவருக்கும் புடவை அன்பளிப்பாக கொடுத்துள்ளேன். மறுக்காமல் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றார்.

உடன் வந்த பெண் தோழர்கள் அமைதியாக இருந்தனர். ஆனால் ஆண் தோழர் ஒருவர் , "எங்களுக்கு எதுக்கு புடவை" என்று மடக்கினார். அதற்கு அவர், "இது உங்கள் மனைவிக்கு" என்ற உடன் அவர் அமைதியாகி விட்டார். உடன் வந்த இன்னொரு தோழருக்கு திருமணமே ஆகவில்லை. அவர், "தோழர் எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. நான் என்ன செய்ய?" என்று கேட்டார். அதற்கு அவர், "இது உங்கள் அம்மாவிற்கு கொடுங்கள்" என்று ஆச்சரியமூட்டினார்.

**நெகிழ வைத்த வார்த்தைகள்**

"எதுக்கு தோழர் இவ்வளவு செலவு செய்தீர்கள், மாநாட்டிற்காவது இதை நிதியாக கொடுத்திருக்கலாமே" என்று கேட்டதற்கு, "தோழர். இதுவரை என் வீட்டிற்கு உறவினர்கள் யாரும் இவ்வளவு பேர் என்னை பார்க்க வரவில்லை. உங்களைப் பார்த்த உடன் உங்களையே என் சொந்தங்களாக பார்க்கிறேன்" என்று கண்கலங்கினார். நாங்கள் விடைபெற்றுக்கொண்டு வரும் போது நாம் இன்னும் ஊழியர்களிடம் நெருக்கமாக பணியாற்ற வேண்டிய அவசியமுள்ளது என்று யோசித்துக்கொண்டே சென்றோம்.

**அமைப்பிற்கு கிடைத்த அங்கீகாரம்**

உத்தனப்பள்ளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் மரு.உதயகுமார் அவர்களின் வீட்டிற்கு ஒரு ஞாயிறன்று சென்றோம்.ஓசூரில் அவர் இருப்பிடம் சரியாக தெரியாததால் கூகுள் மேப் அனுப்பச் சொல்லி அதன்படி சென்றோம்.

ஆச்சர்யமாக அவர் தெருவுக்கே வந்து எங்களை அழைத்துச் சென்றார். அதைவிட ஆச்சர்யமாக அவரின் வயதான பெற்றோர் வாசலில் நின்று இருகரம் கூப்பி எங்களை வரவேற்றவிதம் எங்களுக்கு திகைப்பும், மகிழ்ச்சியும் ஏற்படுத்தியது. அரசு ஊழியர் சங்கத்தின் மீது இத்தனை நம்பிக்கை வைத்திருக்கும் இவர்களுக்கு--இந்த சமுதாயத்திற்கு நாம் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற உணர்வு மேலோங்கியது. அந்த வயதான தாய் தட்டில் பழங்கள் வைத்து எங்களுக்கு பரிமாறியதும், அவரே தேநீர் தயாரித்து எங்களுக்கு வழங்கியதும் எங்கள் வாழ்நாள் முழுவதும் நினைக்கும் படி நிகழ்வாக மாறிவிட்டது. அந்த மருத்துவ அலுவலர் மகளிர் மாநில மாநாடு சிறப்பாக நடைபெற வாழ்த்தி ரூ 3,000/- நன்கொடை வழங்கி வாசல்வரை வந்து வழியனுப்பினார்.

அதேபோல் கிருஷ்ணகிரியில் தோழர்கள் R.M.மஞ்சுளா, K.சரஸ்வதி, P.மணிமேகலை, ஜெயபிரபா, A.மணி, G.வெங்கடேசன், K. பெருமாள்,V.ராமசாமி, P.ஸ்டாலின், K. சின்னசாமி, இக்பால், K.தேவன்,M.செல்வகுமார் ஆகியோர் கொண்ட குழு நிதி சேகரிப்பு பணிகளை மேற்கொண்டது.

கிருஷ்ணகிரியில் உள்ள திருமதி D. பொன்னி அவர்கள் வீட்டிற்கு நாங்கள் சென்றபோது அசைவ உணவு சமைத்து தலைவாழை இலையில் பரிமாறி ரூ1,000/-, நன்கொடை வழங்கி,

"மாநாட்டில் எனக்கு என்ன வேலை கொடுத்தாலும் நான் செய்கிறேன்" என்று நம்பிக்கையூட்டி பேசினார்.

அதேபோல் கிருஷ்ணகிரியில் தோழர் J. கவியரசன் சுகாதார ஆய்வாளர் அவர்கள் வீட்டிற்குச் சென்று அவர் குடும்பத்தாரிடம் மகளிர் மாநாட்டைப் பற்றி கூறி மாநாட்டிற்கு நிதி வேண்டும் என்று கேட்டோம். அவர், "கொஞ்சம் பொறுங்கள்" என்று கூறிவிட்டு அவர் மனைவியை அழைத்து இருவரும் கலந்து பேசி ரூ 5,000/- நன்கொடை வழங்குவதாக கூறி எங்களுக்கு உற்சாக மூட்டினர்.மனைவி-கணவன் இருவரும் கலந்து பேசி முடிவெடுத்த இந்த குடும்ப ஜனநாயகம் நம் மகளிர் மாநாட்டிற்கு கட்டியம் கூறுவதுபோல் இருந்தது. இதே போல் பல ஊழியர்களின் வீடுகளுக்குச் சென்று மாநாட்டிற்கு அழைப்புவிடுத்து நிதி கேட்டபொழுது அவர்கள் மகிழ்வுடன் நிதி வழங்கியது மங்காத நினைவுகளாய் என்றும் நிலைத்திருக்கும். ஒசூரில் தோழர்கள் K.தேவி சோனா, N.ராதா, S.ஹேமா நந்தினிதேவி,

K. ஜெயலட்சுமி, M. திம்மராஜ், M. சிவா,M. சுரேஷ், P. ஆண்டனிராஜன், A.அருண்குமார், M.சிவனேசன், V.பள்ளியப்பா ஆகியோரும், தேன்கனிக்கோட்டையில், தோழர்கள் J.சாந்தி, கனிமொழி, அனந்தலட்சுமி, S.முருகேசன், C. திருநாவுக்கரசு, K.S.கதிரவன், U. சம்சுல் ஆலம், M. ராஜண்ணா, P. பிரவிண், M.லோகநாதன்,M. வள்ளியப்பன், K.சீனிவாசன் ஆகியோரும், ஊத்தங்கரையில், தோழர்கள் G. காந்திமதி, அழகு தமிழ், S.பத்மஸ்ரீ, G.ராஜேஸ்வரி,M. நந்தகுமார் ஆகியோர் மாநாட்டு நிதி சேகரிப்புப் பணிகளில் சிறப்பாக செயல்பட்ட தோழர்களாவர்.

பொதுவாக எந்த ஊழியர் வீட்டிற்கு சென்றாலும் அவர்கள் குடும்பத்தாரை மொத்தமாக அமர வைத்து மகளிர் மாநில மாநாட்டைப் பற்றி பேசியது அவர்களுக்கும்--எங்களுக்கும் புது அனுபவமாக இருந்தது.

**மாயக்கரங்களால் அரவணைத்த நேச சக்திகள்**

பொதுவாக அலுவலக நிதி சேகரிப்பை தவிர்த்து துறைவாரி சங்கங்களாக, மகளிர் மாநில மாநாடு வெற்றிகரமாக நடைபெற, தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கம், தமிழ்நாடு பட்டு வளர்ச்சித் துறை ஊழியர் சங்கம், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம்,தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கம், தமிழ்நாடு அரசு விடுதி காப்பாளர் சங்கம், பொதுநூலகத்துறை அலுவலர் சங்கம், இந்துசமய அறநிலையத்துறை அலுவலர் சங்கம், கண் மருத்துவ உதவியாளர் சங்கம், புள்ளியில் துறை அலுவலர் சங்கம், தமிழ்நாடு சமூக நலத்துறை பணியாளர் சங்கம், தமிழ்நாடு வணிகவரி பணியாளர் சங்கம் என நேசக்கரம் நீட்டி மாநாட்டின் வெற்றிக்கு

துணைபுரிந்ததை நன்றியுடன் நினைவு கூறுகிறோம்.

**வரவேற்பு குழு அலுவலகமாக மாறிய நெ.46, தேரடி தெரு, திருவல்லிக்கேணி**

மாநாடு நடத்துவதற்கான களப்பணிகள் கிருஷ்ணகிரியில் நடந்துகொண்புருக்கும்போதே, அழைப்பிதழ் வடிவமைப்பு, அச்சிடல், போஸ்டர் தயாரிப்பு--அதை மாவட்டங்களுக்கு பிரித்து அனுப்புதல் போன்ற அனைத்து பணிகளும் மாநில மையத்தில் நடைபெற்றது. குறிப்பாக சென்னை தோழர்களுக்கு நன்றி சொல்லியாக வேண்டும்.

**நீட்டை விட கடினமானதையும் தாண்டி....**

மகளிர் மாநில மாநாட்டை நடந்த வேண்டும் என்று முடிவு செய்த 07.05.2022 மாநில செயற்குழுவிற்கும், மாநாடு நடைபெற்ற 2022, ஆகஸ்ட்-13க்கும் இடைபட்ட காலத்தில், 09.05.2022-அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு பழைய ஓய்வூதியம் சாத்தியமில்லை என்ற மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் அறிவிப்பை கண்டித்து அனைத்து அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம்,

28.05.2022-அகில இந்திய கோரிக்கை நாள் தர்ணா, 08.06.2022-ஊழியர் சந்திப்பு கோரிக்கை விளக்கப் பிரச்சார இயக்கம்-ஆலோசனைக் கூட்டம், 20.06.2022 முதல் 24.06.2022 வரை ஊழியர் சந்திப்பு பிரச்சார இயக்கம், 02.07.2022 -எழுச்சி நாள் கருத்தரங்கம் 08.07.2022-தூத்துக்குடியில் நடந்த AISGEF தேசிய செயற்குழு துவக்கவிழா நிகழ்வில் பங்கேற்பு. 14.07.2022-கிருஷ்ணகிரியில் மகளிர் மாநில மாநாட்டு லோகோ வெளியிட்டு முப்பெரும் விழா. 26.07.2022 - மாவட்ட தலைநகரில் மாலை நோ தர்ணா.

04.08.2022-மாவட்ட மகளிர் மாநாடு என்று இத்தனை இயக்கங்களையும் விடுதலின்றி நடந்திக்கொண்டே மாநாட்டுப் பணிகள் செய்தது கொஞ்சம் சவாலாகத்தான் இருந்தது.

**வந்துவிட்டது வரலாறு தேடிக்கொண்டிருந்த 2022- ஆகஸ்ட், 13**

ஆகஸ்ட்-12 ஆம் தேதியே 30 பெண் தோழர்களும், 25 ஆண் தோழர்களும் மாநாட்டு அரங்கத்திற்கு வந்து பணிகளை துவங்கிவிட்டார்கள். மேடை அமைப்பு, TN-GEA, AISGEF கொடியேற்ற நிகழ்வுக்கென்று தனி மேடை, 75 வது சுதந்திர தின தேசிய கொடியேற்ற நிகழ்வுக்கென்று தனி மேடை ஏற்பாடு, உலகம் முழுவதும் மகளிர் மாநில மாநாட்டை YouTube நேரலையில் காணக்கூடிய வகையில் ஏற்பாடு போன்ற அனைத்து பணிகளும் இரவோடு இரவாக நடந்தது.

**வீர வரலாறு பேசிய தியாகிகள் சின்னம்**

மகளிர் மாநாட்டிற்கென்றே வரலாற்று பின்புலத்தோடு தியாகிகள் ஸ்தூபி அமைக்க வேண்டும் என்று மாநில மையத்தால் முடிவு செய்யப்பட்டு இரவு முழுவதும் அப்பணிகள் நடைபெற்றன.

அமெரிக்க சிகாகோ நகரின் ஹேமார்க்கெட் தியாகிகளுக்காக 1893ஆம் ஆண்டு அர்ப்பணிக்கப்பட்ட நினைவுச்சின்னமானது, கலவரத்தின்போது காயமடைந்து கீழே விழுந்த தொழிலாளிகளின் உடல்களுக்கு ஒரு பெண் காவலாக நிற்பதாக அமைக்கப்பட்டது. அந்த நினைவுச்சின்னத்தின் ஒளி அச்சு கொண்டு தயாரிக்கப்பட்ட உருவச்சிலை தியாகிகள் ஸ்தூபியாக நிறுவப்பட்டது மாநாட்டு அரங்கத்திற்கே ஒரு புத்துயிர்ப்பை கொடுத்தது.

திட்டமிட்டபடி ஆகஸ்ட் - 13 அன்று காலை 09.00 மணிக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியை மாநில மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் C. பரமேஸ்வரி அவர்களும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை துணைப்பொதுச்செயலாளர் தோழர் D.வாசுகி அவர்களும் ஏற்றிவைத்தனர்.

பவளவிழா சுதந்திர தின தேசிய கொடியை மாண்புமிகு மேனாள் நீதியரசர், சென்னை உயர் நீதிமன்றம். முனைவர். S. விமலா, உறுப்பினர் தமிழ்நாடு சட்ட ஆணையம் அவர்கள் ஏற்றிவைத்தார். காவல்துறை பேண்ட் இசையுடன் மூவர்ணக் கொடி பட்டொளி வீசி பறந்தது. அனைவரும் சென்று தியாகிகள் ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்திய பின் மகளிர் மாநில மாநாடு துவங்கி வரலாற்றில் முத்திரை பதித்த நிகழ்வாய் ஜொலிக்கத் தொடங்கியது.●

# பூக்களின் புரட்சி மாநாடு
## - ஒரு குயில் பார்வை

- தெ.வாசுகி

பெண்கள் தொழிற்சங்கத்தில் தலைசிறந்த நிர்வாகிகளாக வேண்டும். அவர்களுக்கான தலைமை பண்பும் நிர்வாகப் பொறுப்பும் யாருடைய கருணையினாலும் பெறக்கூடாது உரிமையாக பெறவேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக எந்த தொழிற்சங்கங்களும் இதுவரை நிறைவேற்றாத 33 விழுக்காடு இடஒதுக்கீடு என்பது தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டில் அமைப்புவிதியில் திருத்தம் செய்து ஆறு பெண்களை அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகளாக அறிவித்தது என்பது அரசு ஊழியர் சங்கத்தின் வரலாற்று நிகழ்வாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

வரலாற்றுப் நெடுகிலும் வெற்றி மட்டுமே பதிவு செய்யப்படுகிறது. அந்த வகையில் கிருஷ்ணகிரியில் நடைபெற்ற நமது மகளிர் மாநில மாநாடு அரசு ஊழியர் வரலாற்றில் ஆழமாக பதித்துள்ள மைல்கல்லில் வெற்றி மாநாட்டின் நிகழ்வுகளை அழியாத பதிவுகளாக பதிவு செய்யவேண்டியது அவசியம் அல்லவா? 06.05.2022 அன்று நமது அமைப்பின் 40 ஆம் ஆண்டு ஸ்தாபன தினத்தன்று சேலம் மாவட்டத்தில் மாநிலத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் கொடியேற்றிய சிறப்பு நிகழ்வாக 07.05.2022 அன்று நடைபெற்ற மாநில செயற் குழுவில் தரணிபோற்றும் தஞ்சையில் நடைபெற்ற 13ஆம் மாநாட்டின் அறை கூவல் தீர்மானத்தை நிறைவேற்றும் நிகழ்வாக மாநில மகளிர் மாநாட்டை கிருஷ்ணகிரியில் நடத்துவதென எடுத்த முடிவின்படி கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகிகள் மாநாட்டினை நடத்திட மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள்.

#### வரவேற்புக்குழு கூட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசு ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கைகளுக்கான போராட்ட வாளினை கூர்த்தீட்டிக் கொண்டு உழைக்கும் வர்க்கத்தின் நலனுக்காகவும், சமூக மாற்றத்திற்காகவும் குரலற்ற பெண்களின் உரிமை குரலாக ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கும் நமது ஸ்தாபனத்தின் மகளிர் மாநில மாநாட்டிற்கான வரவேற்புக்குழு கூட்டம் 11.10.2022 அன்று கிருஷ்ணகிரியில் நடைபெற்றது. மகளிர் மாநில மாநாட்டினை கிருஷ்ணகிரி, குறிஞ்சி மஹாலில் ஆகஸ்ட் 13ல் நடத்துவதெனவும், வரவேற்புக் குழுத் தலைவராக பெண் ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும், தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் முனைவர் உ.சிவப்பிரியா, அவர்களை வரவேற்புக்குழு தலைவராகவும், தோழர் பி. சந்திரன் அமைப்பாளராகவும், தோழர் எம். நந்தகுமார் நிதிகாப்பாளராகவும், மாவட்ட செயலாளர் தோழர் ஆர்.நடராஜன் முன்மொழிந்தார். மேலும், நிதிக்குழு, நிர்வாகக்குழு, பணி ஆலோசனைக்குழு, விளம்பரக்குழு, இடவசதிக்குழு, தொண்டர்குழு, பணிக்குழு என ஏழு சிறப்புக்குழுக்கள் நியமிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.

மாநில மகளிர் மாநாட்டின் இலட்சினை கிருஷ்ணகிரியில் 16.07.2022 அன்று வெளியிடப்பட்டது. இலட்சினையினை மாநிலத் தலைவர் வெளியிட பொதுச் செயலாளர் பெற்றுக்கொண்டார்.

#### திட்டமிடலும் செயலாக்கமும்

16.07.2022 அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் மாவட்ட மாநாடு நடத்துவதெனவும், மாவட்ட மகளிர் துணைக்குழு அமைக்க சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு அறிவித்து அதன்பின் ஆறு பெண் மாநில நிர்வாகிகள் தமிழ் நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு மாவட்ட மாநாடு நடத்திட 39 மாவட்டங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது. அதன்படி ஆறு பெண் மாநில நிர்வாகிகளும் எட்டுதிக்கும் கொட்டு முரசென மாநில மகளிர் நிர்வாகிகள் சூறாவளி பயணம் சென்று மாவட்ட மாநாடுகளில் பங்கேற்றார்கள்.பெண்களின் எழுச்சி என்பது அனைத்து மாவட்டங்களிலும் காண முடிந்தது. ஒரு சில மாவட்டங்களில் முன்கூட்டியே அறிவித்திருந்தால் இன்னும் சிறப்பாக நடத்தியிருப்போம் என்று மாவட்ட நிர்வாகிகள்

ஆதங்கப்பட்டது மகளிர் மாநாட்டின் மீதும், பெண் அரசு ஊழியர் மீதான அக்கறையாகவும் பார்க்க வேண்டியுள்ளது. .

7.05.2022 அன்றைய மாநில செயற்குழுவில் முடிவாற்றப்பட்டு 16.07.2022 அன்று மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் 6 பெண் மாநில நிர்வாகிகள் 39 மாவட்டங்களில் மாவட்ட மகளிர் மாநாடு நடத்திடவேண்டும் என்று இரண்டரை மாதங்கள் கழித்து மிக குறுகிய காலத்தில் திட்டமிடப்பட்டதும் இதனால் பல மாவட்டங்களில் மாநாடுகள் நடத்திட போதிய கால அவகாசமின்மையால் மிகுந்த விமர்சனங்களுக்குள்ளானது.

**சிறப்பு அழைப்பாளர்கள்**

**அகில இந்திய துணைத்தலைவர்**

பெண்கள் இச்சமூகத்தில் எத்தகைய மாற்றங்களை அடையவேண்டும் என்கிற சோசலிச சிந்தனையுடன் பெண்கள் பெண்குழந்தைகள் மீதான வன்முறைகள் சமூக தாக்குதல்களுக்கு எதிராக தன் எழுத்துக்களாலும், இணைய ஊடகத்தின் வாயிலாகவும், அரங்க மேடைகள் மூலமாகவும் தொடார்ந்த குரல் எழுப்பிவருபவரும் அனைத்திந்திய ஜனநாயக மாதர்சங்கத்தின் அகில இந்திய துணைத்தலைவருமான தோழர் உ. வாசுகி அவர்களை பெண்கள், சிறுமிகள் மீதான பாலியல் குடும்ப வன்முறைக்கு எதிராக சென்னையில் நடைபெற்ற சிறப்பு மாநாட்டில் முடியும் வரை காத்திருந்து அழைத்தபோது தனக்கு வேறு கூட்டங்கள் இருப்பதால் வருவதற்கான சாத்தியமில்லை என்று கூறியபோது நமது மாநிலத் தலைவர் மு. அன்பரசு அவர்களிடம் மிகுந்த வருத்தத்துடன் பதிவு செய்தோம். மாநிலத் தலைவரும், தொடர்ந்து தொலைபேசியிலும் தொடர்பு கொண்டோம். தோழர் உ. வாசுகி அவர்கள் மாநாட்டை துவக்கி வைக்க சம்மதித்தது நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது

**மாண்புமிகு நீதியரசர்**

பெண்கள், பெண் குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்கள் குடும்ப வன்முறைகளுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்தும் சமரசமற்ற, சரித்திரமிக்க தீர்ப்புகளை வழங்கிய மாண்புமிகு மேனாள் உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். விமலா அவர்களை அணுகியபோது அவர்கள் எங்களை ஒரு சகோதரியாக பாவித்து வரவேற்றது மட்டுமல்லாமல் அரசு ஊழியர் சங்கம் மகளிர் மாநாடு நடத்துவதன் அவசியம் குறித்து பொறுமையாக கேட்டறிந்தார். தமிழகம் முழுவதும் 39 மாவட்டங்களிலும் அரசு ஊழியர் சங்கப் பதாகையின் கீழ் உள்ள 64 க்கும் மேற்பட்ட துறைவாரி சங்கங்களில் பணிபுரியும் பெண் பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என்று கூறியவுடன் ஆச்சரியத்தில் அவர் புருவம் உயர்ந்ததை எங்களால் காணமுடிந்தது. அதுமட்டுமல்ல இன்றைய கால கட்டத்தில் பணிபுரியும் பெண்களுக்கு பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல் குறித்தும் குடும்ப வன்முறைகள் குறித்தும் பெண்களுக்கு சட்ட விழிப்புணர்வு தேவை என்பதை மாண்புமிகு நீதியரசரே கூறிவிட்டு தான் மாநாட்டிற்கு அவசியம் வருவதாக தெரிவித்தது மாநாட்டிற்கு பெருமை சேர்ப்பதாக இருந்தது.

**மாநில மகளிர் ஆணையத் தலைவர்**

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி குமரி அவர்களை அணுகினோம். திருமதி குமரி அவர்களிடம் நமது மாநாட்டில் ஏன் பங்கேற்க வேண்டும் என்பது குறித்து பேசியபோது பெண்கள் பெண் குழந்தைகள் மீதான வன்முறைகள் குறித்து மிகுந்த கவலையுடன் எங்களிடம் பகிர்ந்து கொண்டது மட்டுமல்லாமல் கிருஷ்ணகிரியில் நடத்துவது பொருத்தமானது என்றும் தான் அவசியம் பங்கேற்பேன் என்றும் எத்தனை பெண்கள் வருகிறார்கள் என்பது எண்ணிக்கை எனக்கு முக்கியமில்லை பெண்கள் பங்கேற்றாலே போதும் நான் அவசியம் வருவேன் என்று கூறியதும் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை தந்தது

**அன்புள்ளம் கொண்ட ஐ.ஏ.எஸ் அதிகாரிகள்**

திருமதி சோ மதுமதி ஐ.ஏ.எஸ் அவர்கள்ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையராக இருந்தபோது சந்தித்து நமது மாநாட்டில் பேருரையாற்ற அழைத்தபோது இந்த மாநாடு எதற்காக என்று கேட்டபோது அரசுப் பணியிடங்களில் பெண்கள் 60 சதத்திற்கும் மேல் பணிபுரிகிறார்கள் அவர்களுக்கு குடும்பத்திலும், பணியிடத்திலும் பாதுகாப்பு வழங்கிட விழிப்புணர்வு மாநாடாக அமையஉள்ளது என நமது மாநாட்டின் சிறப்பை கூறியவுடன் தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கம் இது போன்ற

மாநாடுகளைக் கூட நடத்துவதுண்டா? என்று கேட்டுவிட்டு தனக்கு மாநாட்டிற்கு வருவதற்கான ஆர்வம் மிகுந்து உள்ளதாகவும் தெரிவித்தார். நமது மாநாட்டிற்கான அழைப்பிதழ் கொடுக்கச் சென்ற போது தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகத்தின் மேலாண் இயக்குநராகியிருந்தார். மாநாடு நடக்கும் நேரத்தில் அரசாங்க சுற்றுப்பயணம் காரணமாக வரமுடியவில்லை என்றும் மாநாடு சிறப்பாக நடந்திட வாழ்த்துகிறேன் என்று நமது மகளிர் மாநாட்டினை வாழ்த்தினார். சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை இயக்குநர் திருமதி த. இரத்தினா இ.ஆ.ப., நமது மாநாட்டிற்கு அழைத்தபோது அவர்கள் தன்னால் வரமுடியவில்லையென்றாலும் கிருஷ்ணகிரி மாவட்ட அலுவலர் திருமதி விஜியலட்சுமி அவர்களை மாநாட்டிற்கு அனுப்பியதும் 12.08.2022 அன்றிரவு அவரை அலுவகத்தில் சந்தித்து அழைத்தபோது அவர் நெகிழ்ந்துபோனார். தனது மாவட்டத்தில் தமிழகம் முழுவதும் அனைத்து துறைகளிலும் பணிபுரியும் பெண்கள் அணிதிரண்டு வருவது கண்டு மாநாட்டினை பயனுள்ள மாநாடாக வேண்டும் என்று தன்னிடமிருந்த பெண்கள் விழிப்புணர்வு கைப் பிரதிகள், சிறிய கையடக்க புத்தகங்கள், விழிப்புணர்வு வாசகங்கள் அச்சிடப்பட்ட ஸ்டிக்கர் உள்ளிட்டவை வழங்கி எங்களை ஆச்சிரியத்திற்குள்ளாக்கினார்.

கிருஷ்ணகிரியில் எப்போழுதும் புலரும் காலைப்பொழுது 13.08.2022 அன்று மட்டும் பரபரப்புடன் காணப்பட்டது. அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பெண்கள் அணி அணியாக திரண்டு வந்துகொண்டிருந்தார்கள்.

மாண்புமிகு மேனாள் நீதியரசர் விமலா, மாநில மகளிர் ஆணையத் தலைவர் குமரி இருவரும் முதல் நாளே கிருஷ்ணகிரியில் வந்து தங்கிவிட்டார்கள். 3.08.2022 அன்று காலை 7.00 மணியளவில் மாண்புமிகு மேனாள் நீதியரசர் அவர்களை மாநாடு துவங்கும் முன் அழைக்கச் சென்றபோது அன்போடு அழைத்து காலை டீ யுடன் உபசரித்து மாநாடு துவக்கம் பற்றி ஆவலோடு கேட்டறிந்து சரியாக 9.00 மணிக்கு மாநாடு துவங்கும்போது தான் அங்கே இருப்பதாக தெரிவித்தார்கள். மாநில மகளிர் ஆணையத் தலைவரை அழைத்தபோதும் மிகவும் சந்தோஷத்துடன் உங்களுக்கு மாநாட்டுப்பணிகள் நிறைய இருக்குமே? இவ்வளவு பணிகளுக்கிடையே என்னை அழைக்க வந்திருக்கீங்க... என்றுவாஞ்சையோடு கேட்டுவிட்டு நானே மாநாட்டிற்கு வந்துவிடுவேன் என்று கூறிவிட்டார்கள்.

**நானிலம் போற்றும் மாநாட்டின் துவக்கம்**

மகளிர் மாநில மாநாடு திட்டமிட்டவாறு காலை 9.00 மணிக்கு சேலம் மாவட்ட காவல்துறையின் விண்ணதிரும் பேண்ட் வாத்தியம் முழக்கத்துடன் நமக்கே உரித்தான கம்பீரத்துடன் துவங்கியது.மாநில தலைவர் தோழர் மு. அன்பரசு அவர்கள் ஒலிவாங்கியில் (மைக்) அறிவித்தவாறு விண்ணதிரும் முழக்கங்களுடன் அரசு ஊழியர் சங்க வரலாற்றில் முதன் முறையாக மகளிர் மாநில மாநாட்டின் துவக்கமாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடியினை துணைப்பொதுச் செயலாளர் தோழர் டி. வாசுகி ஏற்றினார். தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியினை மாநில துணைத் தலைவர் தோழர் சி.பரமேஸ்வரி ஏற்றினார்.

**75 ஆம் ஆண்டு சுதந்திரதின கொடியேற்றம்**

நமது இந்திய தாய்த் திருநாட்டின் 75 ஆம் ஆண்டு சுதந்திர தினம் நாடுமுழுவதும் கொண்டாடிவரும் நிலையில் சிவப்பு கம்பள வரவேற்பில் நீதியரசருக்கு முன்னே காவல் துறை பேண்ட் வாத்தியம் முழங்க இருபுறமும் பெண் அரசு ஊழியர்கள் போர் வீராங்கனைகள் போன்று வரவேற்பளிக்க வரலாற்றுச் சிறப்புமிக்க கொடியேற்று நிகழ்வுக்காக அனைவரும் கட்டுக்கோப்புடனும் ராணுவ மிடுக்குடனும் பெண்கள் படை சூழ மேனாள் நீதியரசர் விமலா கொடியேற்றினார். காவல் துறை பேண்ட் வாத்தியம் மூலம் தேசிய கீதத்தை இசைத்து முடித்ததும் நமது வீராங்கணைகள் ஜன கன மண என்று தேசிய கீதம் இசைக்க அனைவரும் பாடியது தேசப்பற்றின் ஊற்றாக அமைந்தது.

**தியாகிகளுக்கு அஞ்சலி**

சிகாகோவில் வேலை நேரத்தை 8 மணி நேரமாக அறிவிக்க கோரி தொழிலாளர் இயக்கம் மே.1 1886 ல் 80,000 தொழிலாளிகள் பங்கேற்ற வலுவான ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நடைபெற்றது. மே4 ஆம் தேதி நடைபெற்ற குண்டு வெடிப்பில் காவலர்கள் கொல்லப்பட்டதை தொடர்ந்து 7 தொழிலாளர்கள் தூக்கிலிடப்பட்டனர். இந்நிகழ்வுக்கு வரலாற்று நினைவுச் சின்னம்

ஹேமார்க்கெட்டில் எழுப்பப்பட்டது, ஹேமார்க்கெட் தியாகிகள் நினைவுச்சின்னத்தில் கலவரத்தில் மரணமடைந்த ஒரு தொழிலாளியின் உடம்பை பாதுகாத்து நிற்கும் பெண் ஒருவரின் சிலை நிறுவப்பட்டது. மே 1 உலக தொழிலாளர் தினம் உருவான தியாக வரலாற்றை நினைவு கூறும் வகையில் உள்ள தியாக சின்னத்திற்கு அனைவரும் உணர்வு பூர்வமாக வீர அஞ்சலி செலுத்தினர். பின்னர் தொழிற்சங்க போராட்டத்தில் உயிர்நீத்த எண்ணற்ற தியாகிகளின் நினைவாக ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

**கொட்டும் முரசுடன் துவங்கிய வெற்றி மாநாடு**

மாநாட்டின் பொது அமர்வு துவங்கும் முன் மாநிலத் தலைவர் மு. அன்பரசு அவர்கள் முறையாக மாநிலத் துணைத்தலைவரும் மாநில மகளிர் அமைப்பாளருமான தோழர் சி. பரமேஸ்வரி அவர்களை மாநாட்டிற்கு தலைமைதாங்குமாறு அறிவித்தார். சிறப்பு அழைப்பாளர்களான மாண்புமிகு மேனாள் நீதியரசர் எஸ்.விமலா அவர்கள் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் அகில துணைத்தலைவர் தோழர் உ.வாசுகி அவர்கள் மற்றும் மாநில மகளிர் ஆணையத் தலைவர் ஏ.எஸ். குமரி மேடம் ஆகியோருடன் மாநில பெண் நிர்வாகிகள், மாநிலத் தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மகளிர் அமைப்பாளர் தோழர் கே.ஜெகதாம்பிகா ஆகியோர் அமர்ந்திருந்தனர். நிகழ்ச்சி தொகுப்பாளராக தோழர் ச. ஹேமலதா அறிவிக்கப்பட்டார்.

முதல் நிகழ்வாக கிருஷ்ணகிரி ஆர் சி பள்ளி மாணவர் அகஸ்டின் ரூபன் உள்ளிட்ட மாணவ மாணவிகளின் இசை வாத்தியங்கள்முழங்கியதை தொடர்ந்து கிருஷ்ணகிரி 5ஆம் வகுப்பு பள்ளி மாணவி செல்வி ரோஷினியின் பரத நாட்டியம் அனைவரையும் கவர்ந்தது. வரவேற்புக் குழுத் தலைவர் முனைவர் உ.சிவப்பிரியா அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் சிறப்பினையும், மாநாட்டின் சிறப்பினையும் கூறி அனைவரையும் வரவேற்றார்.

**மாநாட்டு துவக்கவுரையும், பேருரைகளும்**

தோழர் உ.வாசுகி துவக்கவுரையாற்ற மாண்புமிகு நீதியரசர் விமலா, திருமதி குமரி, திருமதி விஜியலட்சுமி ஆகியோர் மாநாட்டுப் பேருரை ஆற்றினார்.

**கருத்துரை அமர்வு**

பிற்பகல் 3.00 மணிக்கு கருத்துரை அமர்வு துவங்கியது. முதலாவதாக மகளிர் மாநில மாநாடு அறிக்கையினை துணைப் பொதுச் செயலாளர் தோழர் டி.வாசுகி சமர்ப்பித்தார். அறிக்கை மீதான விவாதங்களில் 38 மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர்களுக்கு விவாதத்தில் கலந்துகொள்ள தலா 3 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டது, கடலூர் மற்றும் திருச்சி மாவட்டங்களைத் தவிர அனைத்து மாவட்ட மகளிர் அமைப்பாளர்கள் விவாதத்தில் கலந்து கொண்டார்கள். இடையில் மாநில மகளிர் நிர்வாகிகள் கருத்துரையாற்றினார்கள். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்ற தலைப்பில் மாநிலத் துணைத் தலைவர் கோ. பழனியம்மாள், "தொழிற் சங்கத்தில் தோழியர் பங்கு" என்ற தலைப்பில் மாநிலத் துணைத்தலைவர் மு. செல்வராணி, "தூண்டாமணி விளக்குதான் தீண்டினால் தீப்பிழம்பு" என்ற தலைப்பில் மாநிலச் செயலாளர் உ.சுமதி, "பூக்களும் போர் தொடுக்கும்" என்ற தலைப்பில் மாநிலச் செயலாளர் ச.ஹேமலதா "பெண்கள் நேற்று இன்று நாளை" என்ற தலைப்பில் பொதுச் செயலாளர் ஆ. செல்வம் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர் தோழர் ஆர்.நடராஜன் அவர்கள் பணிநிறைவு பெற்றமைக்கு மாநாட்டு மேடையில் மாநிலத் தலைவர் மு, அன்பரசு மற்றும் பொதுச் செயலாளர் தோழர் ஆ.செல்வம் மற்றும் துணைப் பொதுச் செயலாளர் தோழர் டி வாசுகி ஆகியோரால் நினைவுப் பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டது.

"உன்னால் முடியும் தோழி" என்ற தலைப்பில் மாநிலத் தலைவர் மு. அன்பரசு ஆற்ற வேண்டிய கருத்துரை நேரமின்மை காரணமாக கைப்பிரதியாக அச்சிட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டது. ரப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல என்ற தலைப்பில் தோழர் டி.வாசுகி ஆற்ற வேண்டிய உரை நேரமின்மை காரணமாக அரசு ஊழியர் இதழில் வெளியிடுவதாக மாநில மகளிர் அமைப்பாளரால் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்ட மகளிர் அமைப்பாளர் கே. ஜெகதாம்பிகா அனைவருக்கும் நன்றி கூற மாநாடு இனிதே நிறைவு பெற்றது.

●

# பூக்களும் போர் தொடுக்கும்!

- ச.ஹேமலதா

பெண்ணைப் பூவென்று
சொல்லி வச்ச காலமெல்லாம் போச்சு
அவர்கள் சிந்தனையும் இப்ப மாறலாச்சு"

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினராகிய நாம் போராட்ட குணம் உள்ளவர்களாக, நம் உரிமைகளை விட்டுக் கொடுக்காதவர்களாக, ஒடுக்கப்பட்ட பெண்ணினத்தை முன்னேற்ற உழைப்பவர்களாக இருக்கிறோம். இந்த சமூகத்தில் வாழ்வென்பது பெரும் போராட்டமாகவே உள்ளது. மனித குலம் தோன்றிய காலத்திலிருந்து இப்போது வரை உணவுக்கான போர், நிலத்துக்கான போர், சுதந்திர போர், உரிமைப்போர், என்றும் வழி நெடுகிலும் போர்களைப் புரிந்த வண்ணமே மனித இனம் இத்தனை தூரம் வந்திருக்கிறது.

இதில் நமது நாட்டில் பெண்ணினத்தின் நிலையைக் கணக்கிலெடுத்தால், சங்க காலம் தொட்டு பெண்ணிற்கு மட்டுமான கட்டுப்பாடுகள், விதிமுறைகள், பழக்கவழக்கங்கள் என்று பெண்கள் பல விதங்களிலும் ஒடுக்கப்பட்ட வண்ணமே இருந்திருக்கிறார்கள். பெண்கள் கடைபிடிக்க வேண்டிய அறங்களாக அச்சம், மடம், நாணம், பயிற்பு என்பனவும், ஆண்களின் அறங்களாக வீரம், போர், வெற்றி, ஈகை, புகழ், ஒழுக்கம் ஆகியவையும் இலங்கியங்களில் பேசப்படுகிறது. இலக்கியத்திலிருந்து பெறப்படும் ஆதாரங்களாக சிலவற்றை காணலாம். சங்க கால ஔவை நல்ல ஆடவர் இருந்தால் தான் நாடு நலம் பெறும் என்ற பொருளில் 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்று குறிப்பிடுகிறார்.

'முந்நீர் வழக்கம் மகடூவோ டில்லை' என்று பெண்கள் கடல் கடந்து செல்லும் வழக்கம் இல்லை என்று கூறும் தொல்காப்பியம் 'இற்பரத்தை, சேரிப்பரத்தை, காமப் பரத்தை, காதல் பரத்தை' என பலவிதமான 'பரத்தைகள் குறித்து ' பேசுகிறது. குறுந்தொகை பாடல் ஒன்று வினையே ஆடவர்க்கு உயிரே, மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' என்கிறது. நாம் அனைவரும் நன்கறிந்த ஆத்தி சூடி "தையல் சொல் கேளேல்" என்கிறது.

இத்தகைய சூழலில் பூக்களாக பாடப்பட்ட பெண்கள் போர்ப்பறைகள் முழக்குபவர்களாக, சமூக முன்னேற்றப் போரில் களம் கண்ட முன்னணி வீரர்களாக வெற்றி பெற்றுள்ளனர் என்பது வரலாறு. பெண்களின் படிப்பு என்பதே அனைவருக்கும் எட்டாக்கனியாக இருந்த காலத்தில் படித்து மருத்துவராகி இந்த சமூகத்தில் புரையோடிப் போயிருந்த மூடப்பழக்கங்களை அகற்றும் போரில் முன்னணியில் நின்ற மரு. முத்துலட்சுமி, அவருடன் சேர்ந்து சமூகப்பணியாற்றிய அவரது தங்கை நல்லமுத்து, மரு. சௌந்தரம் ஆகியோர் புரட்சிப் பூக்களாக இன்றும் மணம் வீசுகிறார்கள்.

2003 அரசு ஊழியர் சங்க வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பதிக்கப்பட்ட வருடம். உலகமே திரும்பிப் பார்க்கும் விதத்தில் டெஸ்மா, எஸ்மாவை எதிர்த்து அரசு ஊழியர் சங்கம் களம் கண்ட போது அந்த எழுச்சிப் போரில் பங்கேற்ற பெண் தோழர்கள் கைதுக்கும், சிறைச்சாலைக்கும் அஞ்சாமல் துணிவுடன் முன் நின்றனர். விடாமல் போராடி வெற்றிக் கனியை

பறித்த அந்த சிறப்புமிக்க போரில் எத்தனை பூக்கள் வீராங்கனைகளாக நின்றனர்!!!

2016 இல் காத்திருப்புப் போராட்டம் என்ற புதிய உத்தியை நாம் போராட்டக் களத்தில் கையிலெடுத்த போது ஆண்களுக்கு சமமாய் இரவு பகல் பாராமல் காத்திருப்புப் போரில் களத்தில் நின்ற பெண் தோழர்கள் இல்லாமல் நம் வெற்றி சாத்தியமாயிருக்காது. 110 விதியின் கீழ் அரசாணைகளைப் பெற்றிருக்க முடியாது. போராட்டத்தின் போது கால் எலும்பு முறிவு ஏற்பட்ட போதும் மனத்துணிவை இழக்காமல் கால் கட்டுடன் மீண்டும் போராட்டத்தில் பங்கு பெற்ற தோழர், பெண்களின் போராட்ட குணத்துக்கு ஒரு சோற்றுப் பதம்.

தோழர்களே பெண்களின் போராட்ட குணம் குறித்து பேசும் போதெல்லாம் நாம் வேலு நாச்சியாரையும், வீரப்பெண் குயிலியையும் குறிப்பிடுகிறோம். அவர்கள் தங்கள் நாடு அடிமைப்படாமல் இருக்க தங்கள் இன்னுயிரை ஈந்தனர். பெண்களின் இயல்பிலேயே சுதந்திர உணர்வும், உரிமைக்காக குரல் கொடுக்கும் குணமும் பொதிந்திருக்கிறது. மண்ணில் புதைந்துள்ள விதைகள் சரியான காலச்சூழலும் நீரும் வாய்க்கப் பெறும் போது விருட்சமாக வளர்வதைப் போலவே, பெண்கள் சரியான முறையில் சிந்திக்கும் போது அந்த இயல்புடன் மிகச் சிறந்த ஆளுமைத் திறன் மிக்கவர்களாக அவர்கள் மிளிர்கின்றனர்.

தங்கள் மீது தொடுக்கப்படும் பலவிதமான வன்முறைகளை எதிர்த்து துணிவுடன் எதிர்வினையாற்று கின்றனர். அடிமைத்தனத்திற்கு எதிரான உரிமைப் போரிலும், மூடப்பழக்கங்களை எதிர்க்கும் அறிவுப் போரிலும், பாலியல் ரீதியான வன்முறைகளை எதிர்கொள்ளும் நிகழ்காலப் போரிலும் பெண்கள் துணிந்து போராடிய வண்ணம் உள்ளனர். 12 வயதில் ஆசிட் வீச்சால் பாதிக்கப்பட்டாலும், மனம் தளராமல் வாழ்வை எதிர் கொண்டு வரும் டாலி ஆசிட் வீசிய அந்த நபருக்கு தண்டனை கிடைத்த பிறகு டாலி ஒரு கடிதம் எழுதுகிறார். அந்த கடிதத்தில் "" நீங்கள் சிதைத்தது என்னுடைய முகத்தை மட்டுமே. வாழ்க்கையின் நோக்கத்தை அல்ல. அதன் மீது உங்களால் ஆசிட் வீச முடியாது,” என்று குறிப்பிட்டிருந்தார். இதுவே பெண்ணின் வெற்றி. குடும்ப வன்முறை, ஆசிட் வீச்சு, பாலியல் துன்புறுத்தல், பெண் என்பதாலேயே திறமைகளை குறைத்து மதிப்பிடுதல், அடிமைப்படுத்துதல் போன்ற தாக்குதல்களை எதிர்த்து போராடி வரும் பெண்கள், ஒவ்வொரு துறையிலும் தங்கள் சாதனைகளை நிகழ்த்திய வண்ணம் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். எதிர்நீச்சல் போட்டு முன்னேறும் பெண்கள் குறித்த பல தகவல்கள் மறைக்கப் படுகின்றன, ஆண்களின் சாதனைகள் பேசப்படுவது போல் பெண்களின் சாதனைகள் பேசப்படுவதில்லை. ஆனாலும் பெண்கள் ஓடிய வண்ணம் உள்ளனர். தனிமனித உரிமைகளுக்காக, சமூக முன்னேற்றத்திற்காக, உலக அமைதிக்காக போரிட்டபடி மேன்மேலும் முன்னேறும் பெண்களாய், ஒவ்வொரு பெண்ணுக்கும் பாதுகாப்பான வாழ்வை உறுதிப்படுத்தும் பெண்களாய், அதற்கான போராட்டங்களில் முன் வரிசையில் நிற்கும் பெண்களாய் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற அமைப்பாய் திரளுவோம். போர்ப் பறை முழக்குவோம். வெற்றி முரசு கொட்டுவோம். "பூக்களும் போர் தொடுக்கும் எங்கள் பாக்களும் பறை முழங்கும் வெற்றி பறை முழங்கும்" ●

# தொழிற்சங்கத்தில் தோழியரின் பங்கு!

- மு.செல்வராணி

தொழிற்சங்கத்தில் தோழியரின் பங்கு : பெண்ணே உன்னால் முடியும் புது உலகம் படைக்க வா ! என்று அழைக்கிறது இன்றைய சமுதாயம். நீ சோர்ந்து விட்டால் உன்னை சுற்றி சுவர் எழுப்பி விடுவர் எழுந்து நடந்தால் இமயமலையும் உன் காலடியில் ஏட்டை தொடுவது பாவம் வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டிவைப்போம் என்ற விந்தை மனிதர் இன்று இல்லை சாதனைகளுக்கும் பஞ்சமில்லை வீறுகொண்டு எழுந்திடு! புதிய சமுதாயம் படைத்திடு – எனக் கூறி தொழிற்சங்கத்தில் உலகிலே எங்கும் இல்லாத வகையில் 33% இட ஒதுக்கிடு கொடுத்து வெற்றி நடை போடுங்கள் என நம்மை முன்னேற்ற பாதைக்கு அழைத்து செல்லும் நம் தொழிற்சங்கத்தை வணங்கி தொழிற்சங்கத்தில் தோழியரின் பங்கு பற்றி பேச இருக்கிறேன். இந்தியாவில் சுதந்திரத்துக்கு பாடுபட்ட ஜான்சி ராணி, வேலுநாச்சியார் காலத்திலிருந்து தேவதாசி ஒழிப்பு முறைக்கு பாடுபட்ட நம் மரு. முத்துலட்சுமிரெட்டி வரை தொழிற்சங்க வரலாறு படைத்த தோழிகள் தான்.

தோழியரே, தொழிற்சங்கத்தில் மகளிரின் பங்கு இன்று நேற்றல்ல, பதினெட்டாம் நூற்றாண்டிலே நியூயார்க்கு தையல் நிறுவன பெண்கள், முதல் வேலை நிறுத்தம் செய்து தங்களின் உரிமைக்காக போராடினர். 1908 – ல் பதினயிந்தாயிரம் பெண்கள் நியூயார்க்கு நகரில் ஒரு பேரணியாக சென்று தான் தங்களுடைய வாக்குரிமையும் பெற்றனர். 1917 – ல் முதல் உலகப்போர் நடக்கும்போது 4 – நாட்கள் நடந்த பெண்கள் போராட்டத்தில் எங்களுக்கு போராட்டம் வேண்டாம். ரொட்டியும் அமைதியும் போதும் என தெருவில் இறங்கியவர்கள், நம் தொழிற்சங்கத் தோழியரே. 8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் ஓய்வு, 8 மணி நேரம் உறக்கம், என உரிமையை நிலை நாட்டிய ஜெர்மனியை சேர்ந்த "கிளாரா ஜெட்கின்" தலைமையிலான பெண்கள் தான் நாம் வருடந்தோறும் கொண்டாடிக் கொண்டு இருக்கிற, உலக மகளிர் தினத்திற்க்கான காரண கர்த்தாக்கள். நாம் மகளிர் தினத்தன்று நம் உரிமையை, போராட்ட குணத்தை பேசி விடக்கூடாது என்பதற்காகவே இன்று மகளிர்தினத்தன்று ஒரே மாதிரி உடை அணிந்து கேக் வெட்டி, போட்டிகள் நடத்தி நம் போராட்ட குணத்தை மழுங்கடித்து கொண்டு இருக்கின்றனர். இன்று கிட்டத்தட்ட அரசுப்பணியில் 60% பேர் பெண்களாக இருக்கும் பட்சத்தில் நம் உரிமைகளை கூட பேசுவதற்கு தயக்கம் கொள்கின்ற நேரத்திலே!

நம் தொழிற்சங்க பெண்கள் 1988 – ல் மத்திய அரசுக்கு இணையாக ஊதியம் பெறுவதற்காக ஆளுநர் ஆட்சியில், சென்னையில் நடந்த போராட்டத்திலே! குதிரை படையைக் கொண்டு அஞ்சாது என் மீது குதிரையை மிதிக்க செய்து விட்டு என் தலைவர்களை கைது செய்யுங்கள் எனக் கடற்கரை சாலையிலே! ரோட்டில் படுத்து குதிரை படை வீரர்களை கேள்வி கேட்ட திண்டுக்கல் கருவூல சகோதரி விஜயலட்சுமி போன்ற தோழிகளின் முதல் வரலாறு தான் நாம் இன்று பெற்று கொண்டு இருக்கிற கௌரவமான ஊதியத்தின் முதல் படி. நம் சத்துணவு வீராங்கனைகள் தங்களை முழுநேர அரசு ஊழியர்களாக அறிவிக்க கோரி தொடர்ச்சியாக 34 ஆண்டுகளாக போராடி வருகின்றனர். இதே கிருஷ்ணகிரியை சேர்ந்த சத்துணவு தோழி ஜெகதாம் பிகாவின் போரட்டக் கனலை, 2021 – ல் கோட்டை முற்றுகையில் அனைத்து ஊடகங்களும் பறைசாற்றின. அதே கோட்டை முற்றுகையில் காவல் துறையால் தாக்கப்பட்டு கால் முறிந்த பின்பும் களத்தில் நின்ற, கால்நடைத்துறையை சார்ந்த திருப்பூர் ராணியும் – ஓர் போர் வீராங்கனையே!. சத்துணவு ஊழியர்கள், மக்கள் சந்திப்பு இயக்கம் , ஒப்பாரி போராட்டம், பிச்சை எடுக்கும் போராட்டம் போன்ற நவீன போராட்டங்களின் வீராங்கனைகள், அவர்கள், VHN சங்கமும் வலுவான இயக்கங்களை நடத்தி ஒரு சில உரிமைகளை பெற்றது. 2017 – ல் பிப்ரவரி 24 – ல் பிரதமர் மோடி தமிழகம், வரும்போது பழைய ஒய்வூதியத்தை முன்னிறுத்தி பெண்களே தலைமையேற்று நடத்திய ஜாக்டோ ஜியோ போராட்டம் சென்னையை ஸ்தம்பிக்க செய்தது. நம் அரசு ஊழியர் சங்கம் கோரிக்கைகளை வென்று எடுக்க காத்திருப்பு போராட்டம், சிறை

நிரப்பும் போராட்டம் - என்று களமிறங்கிய போது மகளிர் வீட்டிற்கே செல்லாமல் களத்தில் நின்று போராடியது, தொழிற்சங்கத்தில் நாம் எப்படி வளர்ந்து இருக்கிறோம் என்பதை காட்டுகிறது. கொரோனா காலத்தில் உலகே அச்சமுற்று நிற்கும் வேலையில் இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் மருத்துவத்துறையில் பெண்களின் சேவை பாராட்டுக்குரியதாக இருந்தது என்பதை உலகம் அறிந்ததே, அந்த துறையின் முதுகெலும்பான MRB - செவிலியர்கள் தங்களை பணி நிரந்தரம் செய்ய சொல்லி, DMS வளாகத்தில் உண்ண உணவு இல்லாமல், உடை மாற்ற வழியில்லாமல், இயற்கை உபாதையை கழிக்க முடியாமல் கழிவறைகள் பூட்டப்பட்ட நிலையில் தொடர்ந்து காத்திருப்பு போராட்டம் நடத்தியது நாம் அனைவரும் அறிந்ததே.

கடந்த ஜனவரி மாதத்தில் மருத்துவத்துறையில் பணியாற்றும் மருத்துவர் உள்ளிட்ட மருத்துவத்துறை ஊழியர்கள் அனைவரும் தங்களுடைய விடுப்பை எடுப்பதற்கு மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் வேண்டும் எனக் ஒரு செய்தி நாளேடுகளில் வந்தவுடன் நமது கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் பொது செயலாளர் மற்றும் மாநில தலைவர் இருவரும் உடனடியாக சுகாதார துறை செயலாளரைக் தொலை பேசியில் தொடர்பு கொண்டு கேட்ட போது, தான் அப்படி ஒரு தகவலை செய்தித்தாளுக்கு தரவில்லை என மறுப்பு தெரிவித்ததுடன் மருத்துவத்துறைக்கு கடிதமும் எழுதினார் இல்லையெனில் நாம் விடுப்பிற்கு மாவட்ட ஆட்சியரை அணுக வேண்டிய சூழ்நிலை ஏற்ப்பட்டிருக்கும். 100% பெண்களாக பணிபுரியும் VHN சங்கம்தான் நமக்கான உரிமைக்கு குரல் எழுப்பி உரிமையை மீட்டிருக்கிறது. என்ற பதிவினை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த காலத்திலேதான் நீதித்துறையில் பணிபுரியும் பெண் ஊழியர்கள் தங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளை எதிர்த்து போராட்டம் நடத்தி வெற்றி பெற்றது. கொரோனா காலம் நமக்கு ஒரு படிப்பினையாக அமைந்தது எவ்வளவு வசதி படைத்தவர்களையும், ஒரு வேளை உணவிற்கு அடுத்தவரிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்பட்டு, அப்படிப்பட்ட உணவை கொடுக்கும் விவசாயத்தை பாதுகாக்க, வேளாண்மை தடை சட்டத்திற்கான போராட்டத்தில் கொரோனாவைக் கண்டு அஞ்சாமல் விவசாயிகளோடு அந்த குளிரில் அவர்களுடன் இணைந்து போராட்டக்களம் அஞ்சாமல் ஒரு வருடத்திற்கும் மேலாக களத்தில் நின்றனர். அண்மையில் ஹரியானா, டெல்லி போன்ற BJP அல்லாத ஆளும் அரசை கொண்ட மாநிலங்களில் பணிநீக்கம் எதிர்ப்பு, ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக, டெல்லியில் லட்சகணக்கான அங்கன்வாடி தோழியர் திரண்டு தம் கோரிக்கைகளுக்கு குரல் எழுப்பினர்.

இன்னும் ஆங்காங்கே நடைபெறுகின்ற, பழிவாங்குதல், பாலியல் வன்கொடுமை போன்ற பெண்களின் பாதுகாப்பிற்காக இன்றைய நம் நாயகிகள் களத்தில் குரல் எழுப்பி உரிமை பெற்றும் உரிமை பெறவும் போராடிக் கொண்டுதான் உள்ளனர். குடும்பம், அலுவலகம் தொழிற்சங்கம் என மூன்றிலும் வெற்றிகரமாக செயல் பட்டாலும், GST COUNCIL - போன்ற இடங்களில் நமக்கான இடங்கள் இல்லை. ஒட்டுமொத்த அரசு பெண் ஊழியர்களின் கொடுமைகளைக் களைய “புகார் குழு கமிட்டியில்” அரசு ஊழியர்களின் சார்பாக, அரசு ஊழியர் சங்கத்தின் பெண் நிர்வாகிகளை உறுப்பினராக்க குரல் எழுப்புவோம். 90% தற்கொலை முயற்சி காலமாக கருதப்படும் மாதவிடாய் காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கவும், கோரிக்கையும் குரலும், எழுப்ப வேண்டும் என்பதே! நம் தோழியரின் குரலாக இருக்க வேண்டும்.

தனிப்பட்ட தோழியரின் வெற்றி ஜொலிக்கிறது. ஆனால் இருட்டில் ஆழ்ந்து கிடக்கின்ற அத்துணை சகோதரிகளும் அச்சமில்லா வாழ்வை அடைய போராட வேண்டியுள்ளது. பாதுகாப்பு அக்கறை என கூறி உன்னை தனியே செயல்படாமல் தடுக்கும் இந்த சமூகம்தான்! தனியே நிற்கும் போது விமர்சித்து செல்லும், வெற்றி வாகை சூடும் போது புகழ்ந்து தள்ளும். தொழிற்சங்கம் மட்டுமே உன்னுடைய துயர காலங்களில் அரவணைத்து நம்பிக்கை ஊட்டி நிமிர்ந்து நிற்க செய்யும் தொழிற்சங்கம் இல்லையெனில் மகளிருக்கு ஏற்படும் கொடுமைகள், அடக்கு முறைகள், வெளி உலகிற்கு தெரியாமல் அவர்களோடு புதைந்து விடும். பேருந்தை எட்டி பார்க்கவே பத்து வயதான கிராமத்தில் இருந்து இன்று உங்களோடு நான் பயணிக்கிறேன் என்றால் அதில் தொழிற்சங்கத்தின் பங்கு அளப்பரியது. வெல்லட்டும் தொழிற்சங்கத்தில் தோழியரின் பங்கு, வெல்வோம் நம் கோரிக்கைளை, இந்த மகளிர் மாநில மாநாட்டின் வாயிலாக. ●

# மனிதம் மறந்த வணிகம்

- ஆர்.நடராஜன்

ஒப்பனையில் மிதக்குது உலகம்!
வணிக உத்தியே இறுதி நோக்கம்.
மனிதம் உண்டா சொல் தோழி!

பளபளக்கும் பல்லுக்கு விளம்பரம்;
பற்பசை ஆலையின் கொள்ளை
லாபம்!
பல்துலக்க நேரமின்றி
பட்டினியோடு
கல் சுமக்கும் என் தோழியை
அறிவாரோ?

பூசும் பசையால் ஏழாம் நாள்
முகம் சிவக்குமாம்!
பெரும் முதலாளிகளின் வங்கியில்
குவியும் பணம்!
காடு கழனியில் களையெடுத்து
குனிந்து நிமிரும்
கருத்த முகம் கொண்ட என்
தோழியை அறிவாரோ?

பத்து வகையில் சருமத்தை
காக்கும் சவுக்கார கட்டிகள் !
அத்தனையும் மக்களை
வீழ்த்தும் வர்த்தகங்கள்!
முக்குத்தெரு பெருக்கி வியர்வை
வழிய
முந்தானையில் தேய்க்கும் என்
தோழியை அறிவாரோ?

கொண்டாட்டம், குதூகலம் ஜவுளி
ரகங்கள் தள்ளுபடி விலையில்!
பகட்டான விளம்பரம் மக்கள்
பணம் மாய வலையில்!
ஆடிப்பண்டிகையில் ஆட்டுக்கு
சுற்றிய மஞ்சள் புடவை
அவிழ்க்கும்வரை ஓரமாய்
காத்திருக்கும் என் தோழியை
அறிவாரோ?

ஒப்பனையில் மிதக்குது உலகம்
வணிக உத்தியே இறுதி
நோக்கம்!
மனிதம் உண்டா சொல் தோழி!

# நன்றி சொல்ல உமக்கு வார்த்தை இல்லை எமக்கு!

- ஜெகதாம்பிகா

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மகளிர் மாநில மாநாட்டை கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வழங்கிய மாநில மையத்திற்கும் ஒட்டுமொத்த மாநில செயற்குழுவிற்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தின் சார்பாக முதலில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மாங்கனிக்கும் குழந்தைகளின் மாமா என்று குழந்தைகளால் அன்பாக அழைக்கப்படும் முன்னாள் பிரதமர் நேரு அவர்களுக்கு பிடித்த ரோஜாவின் நகரமாம் கிருஷ்ணகிரி, அகில இந்திய அரசு அரசு ஊழியர் சங்க கொடியை ஏற்றிய து.பொதுச் செயலாளர் தோழர் D.வாசுகி அவர்களுக்கும், அரசு ஊழியர் சங்க கொடியை ஏற்றிய மாநில மகளிர் அமைப்பாளர் தோழர்.C.பரமேஸ்வரி அவர்களுக்கும், நம் சுதந்திர தினத்தின் 75 ஆம் வருட நினைவைப் போற்றும் வகையில் கொடியை ஏற்றிய மாண்புமிகு மேனாள் நீதியரசர் முனைவர் S.விமலா அவர்களுக்கும், சேலத்திலிருந்து வந்து தேசியக்கொடி ஏற்றுவதற்கு பேட் வாசித்த காவல்துறைக்கும்.

அச்சம் என்பது மடமையடா என்ற பாடலுக்கு பேண்ட் வாசித்த புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளி மாணவியருக்கும், ஆண் பிறக்குமா பெண் பிறக்குமா என்ற விழிப்புணர்வு பாடலை பாடிய தோழர். சுலக்சனா அவர்களுக்கும். பரதநாட்டியம் ஆடிய அரசு பள்ளி ஆசிரியரின் மகளுக்கும், அஞ்சலி தீர்மானத்தை வாசித்து சென்ற அரசு ஊழியர் சங்க மாநில துணைத்தலைவர். தோழர் செல்வராணி அவர்களுக்கும். மகளிர் மாநாட்டிற்கு தலைமையேற்ற மாநில மகளிர் துணைக் குழு அமைப்பாளர் தோழர். C.பரமேஸ்வரி அவர்களுக்கும், அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும், இரட்டை குழல் துப்பாக்கி எனும் வண்ணம் வரவேற்பு தலைவராய் சிறப்பாக பணியாற்றிய பேராசிரியர் முனைவர் உ. சிவப்பிரியா அவர்களுக்கும், எங்கெல்லாம் பெண்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது அங்கெல்லாம் உரத்த குரல் எழுப்பி நாங்கள் இருக்கிறோம். என்று பாதுகாப்பை பாசமாய் வழங்கும் நம் அன்பு தோழர் அகில இந்திய ஜனநாயக மாதர் சங்க துணை தலைவர் தோழர்.உ.வாசுகி அவர்களுக்கும், மாநாட்டு அழைப்பிதழை வழங்கும்போது பெண்களுக்கும் பெண் அரசு ஊழியர்களுக்கும் இவ்வளவு அநீதி இருக்கின்றனவா? அவற்றைக் களைய உங்களுக்கு உறுதுணையாக நாங்கள் இருக்கிறோம் என நம்பிக்கையூட்டி பேருரை ஆற்றிய மாண்புமிகு நீதியரசர் முனைவர் S.விமலா அவர்களுக்கும், மாநில மகளிர் ஆணைய தலைவர் A. S. குமரி அவர்களுக்கும், ஒட்டுமொத்த அரசு ஊழியர்களின் பெண்களின் குரலாக 33% எடுத்துக்கொண்டு கருத்துரை ஆற்றிய மாநில நிர்வாகிகள் தோழர் தெ. வாசுகி அவர்களுக்கும், தோழர். G. பழனியம்மாள் அவர்களுக்கும், தோழர்.மு. செல்வராணி அவர்களுக்கும், தோழர் உ. சுமதி அவர்களுக்கும், தோழர். ச. ஹேமலதா அவர்களுக்கும், அரசு ஊழியர்களின் பெண்கள் தங்கள் உரிமைக்காக குரலெழுப்ப அவர்களை உத்வேகப்படுத்தி மாநில மாநாட்டை சிறப்பாக ஏற்பாடு செய்ய தூண்டுகோலாக இருக்கும் அன்பு தோழர் மாநில தலைவர் மு.அன்பரசு அவர்களுக்கும் ஒட்டு மொத்த அரசு ஊழியர்களின் குரலாக உரிமைக்காக எங்களை முன் வரிசையில் அமர செய்த பொது செயலாளர் தோழர் ஆ. செல்வம் அவர்களுக்கும், இம் மாநாட்டை சிறப்பாக ஒருங்கிணைத்து ராணுவ நடையுடன் வழிநடத்திய அன்புத் தோழர்கள் ஒருங்கிணைப்பாளர் தோழர் B.சந்திரன் அவர்களுக்கும், தோழர். R. நடராஜன் அவர்களுக்கும், இம்மாநாட்டிற்கு இரவும் பகலும் பாராது உழைத்த அனைத்து மாவட்ட கிளை நிர்வாகிகளும், நிதி உதவி பொருள் உதவி அளித்த தோழர்களுக்கும், தோழமை சங்க தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், மண்டபம் உரிமையாளர்களுக்கும், மனமும் வயிறும் நிறைய குளிர உணவு படைத்த உணவு குழு தோழர்களுக்கும், ஒளி ஒலி அமைத்துக் கொடுத்த தோழர் அவர்களுக்கும்,

மாநாட்டு திடல் அலங்கரிக்க தஞ்சையிலிருந்து முன்னதாக வந்து பங்கேற்ற மாநில செயலாளர் தோழர் சா.கோதண்டபாணி அவர்களுக்கும், முன்னாள் மாநில மாவட்ட நிர்வாகிகளுக்கும், மாநாட்டுக்கு பாதுகாப்பு வழங்கிய காவல்துறை நண்பர்களுக்கும், இவ்வளவு பேருக்கும் நன்றி கூறினாலும் இம்மாநாடு சிறக்க தமிழகத்தில் கடைக்கோடியில் இருந்தும் கூட பங்கேற்று சிறப்பித்த நமது அருமை தோழர்களே உங்கள் அனைவருக்கும் கிருஷ்ணகிரி மாவட்ட வரவேற்பு குழு சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம். ●

# பெண்ணின் பெருந்தக்க யாவுள

- கோ.பழனியம்மாள்

உலக வரலாற்றில் ஒரு ஒப்பற்ற தினமாக வியந்து பார்க்கப்படுகின்ற சிறப்புமிக்க தினம் மார்ச் 8 உலக மகளிர் தினம் என்பதையும் அதன் தொடர்ச்சியாகவே இந்திய வரலாற்றிலேயே ஒரு தொழிற்சங்கம் மகளிர்களுக்கு என தனி மாநிலம் தழுவிய மாநாட்டை நடத்துவது இதுவே முதல் முறை என்பதையும் இந்த மாநாட்டு பந்தலில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களின் சரி பாதி பெண்கள் என்பதை காட்டிலும் உலக சுழற்சியில் முக்கியத்துவமான உயிர் நாடி பெண்கள் தான் என்பதை உலகிற்கு உணர்த்துவதற்காகவே இப்படி ஒரு சிறப்புமிக்க மாநாட்டை நடத்தி பெண்களுக்கு பெருமை சேர்த்திருக்கும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் உரிமைக்கான போராட்டக் களத்தில் சமரசமற்ற அமைப்பாய் இன்றும் களமாடும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் இந்த முன்னெடுப்பு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது என்பதை உளமாற பதிவு செய்கிறேன். உலக மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள ஒப்பற்ற நம் தமிழ் நூலாம் உலகப் பொதுமறையாக உள்ள திருக்குறளின் 54 வது குறள் இவ்வாறு சொல்கிறது.

பெண்ணின் பெருந்தக்க யாவுள
கற்பென்னும்திண்மைஉண் டாகப் பெறின்

என்பதாகும். இதில் பெண்ணின் பெருந்தக்க யாவுள என்பதே இன்றைய பேச்சின் தலைப்பு:

**ஒரு பெண்ணுக்கு எது மிகுந்த பெருமை சேர்க்கும்?**

கற்பு எனப்படும் நீதி நெறி என்றும் பெண்ணின் மேம்பட்ட பிறப்பு போல கற்பும் மேம்பட்டதாக இருக்க வேண்டும் என்றும், கற்பு என்கிற மன உறுதி வேண்டும். இதுவே பெண்ணுக்கு மிகுந்த பெருமை சேர்க்கும் என பல சான்றோர்கள் பொருள் தந்துள்ளனர். பெண்ணைவிடப் பெருமையுடையவை ஒன்றும் இல்லை என்பது வள்ளுவர் வாக்கு. பெண்ணின் முக்கியத்துவத்தை உலகம் உணர்ந்து கொள்வதற்காகவே உயிர் வாழ இன்றியமையாத நீர், நிலம் போன்றவை பெண்ணாகவே கருதிப் போற்றப்படுகின்றன. நம்மை அழகியல் மற்றும் கருத்தாழமிக்க கலைத்தாயாகவே உலகம் வழிபடப்படுகின்றன. உலக இயக்கத்திற்குக் காரணமான சக்தி பெண்ணாகவே கருதப்படுகின்றாள். பெண் செழுமையின் அடையாளம்.

**மனித குலம் தழைக்க வந்தவள்:**

ஜீவராசிகள் உயிர் வாழ்வதற்கான தாய்ப்பால் எனும் அருமருந்தை வழங்குபவள்; அன்பிற்கினியவள், கருணை வடிவானவள், மனிதனால் முதலில் அறிந்து கொள்ளப்பட்ட உறவாகத் தாய் உறவு மட்டுமே இருந்திருக்க முடியும். விலங்குகளுக்கு உண்டான ஒத்த தன்மையிலிருந்து மாறி ஆற்றங்கரை ஓரங்களில் நிலையான வாழ்க்கை வாழ்ந்த வேளாண் சமுதாயத்தில் தாய்வழிச் சமூகம்தான் கடைபிடிக்கப்பட்டது.

ஆண்கள் வேட்டையாடச் சென்றபோது பெண்கள் பயிர்த்தொழிலை மேற்கொண்டதோடு, கொடிய விலங்குகள், நோய்கள், இயற்கைச் சீற்றங்களிலிருந்து குடும்பத்தைப் பாதுகாத்தனர். எனவேதான், நாகரீகத்தின் துவக்க காலம் என்று வரையறுக்கப்பட்டுள்ள புதிய கற்காலம் முதற்கொண்டு பெண் வணங்கத்தக்கவளாகவே உள்ளாள். தாய் வழி சமூகத்தில் குடும்பத்தையும் ஒரு பெரும் சமூகத்தை வழிநடத்துகிற தலைவியாக இருந்த பெண்களின் நிலை இன்று என்னவாக இருக்கிறது?. ஆம் மகாகவி பாரதியே சொல்கிறார் “பெண் விடுதலை வேண்டும் பெரிய கடவுள் காக்க வேண்டும்” என்று இதுதான் இன்றைய சமூகத்தில் பெண்களின் யதார்த்த நிலை. இன்னும் விடுதலை வேண்டி பிறக்கும் பொழுதே நான் பெண்ணாக இருந்தால் என்னை வாழ விடுவதற்கான வாழ்வுரிமை வேண்டி, கல்வி வேண்டி, வாழ்க்கை பாதுகாப்பு வேண்டி, அனைவரையும் போல் எல்லா பொதுத்தலத்திலும் நானும் பங்கேற்கின்ற உரிமை வேண்டி, ஆண்டாண்டு காலங்களாய் பெண் என்ற அடையாளத்தோடு அடிமைப்படுத்தி இருக்கிற தனக்கான தனி உரிமை வேண்டி, தனக்கான வாழ்க்கையை தானே தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை வேண்டி, தான் சுயமாக சிந்திப்பதற்கு கூட தனக்கு தனி சுதந்திரம்

வேண்டி, எந்த பெரிய கடவுளாவது நமக்கு இந்த உரிமைகளை மீட்டுத் தராதா என்று இன்னும் ஏங்கி நிற்கிறாள்.சொத்துடமை சமூகம், ஆண்டான் அடிமை சமூகம், நில பிரபுத்துவ சமூகம் என நெடிய காலங்களாய் உருவெடுத்த ஆணாதிக்க சிந்தனை சமூகத்தின் இறுதியில் இன்று உலகை ஆட்டிப் படைக்கும் பெருமுதலாளித்துவ சமூகமும் பெண் அடிமைத்தனத்தை தன்னுடைய பிரதான குறிக்கோளாகவே இன்னும் வைத்து செயல்படுவதால், பெண்ணின் பெருந்தக்க யாவுள எனும் கற்பு மரபை தாண்டிய பெரும் அடையாளங்களாய் இருந்த சங்க காலத்து பெண்களின் வாழ்வியலில் உள்ளடங்கிய பெண்ணின் வீரம், பெண்கல்வி, இலக்கியம், கலை, கலாச்சாரம் சார்ந்த பெண்ணின் சுதந்திரம் அனைத்தும் இன்று பறிக்கப்பட்டு சக மனிதர்களுக்குள்ளேயே ஆணுக்கு தனி உரிமை பெண்ணுக்கு தனி உரிமை என்கிற பாகுபாடுகள் சமூகத்தில் மிகுந்த கெட்டித் தன்மையோடு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நாம் அறிவோம்.

ஒலிம்பிக்கில் ஓடினாள், பழு தூக்கினாள், விளையாடினாள், விருது வென்றாள், ஆகாயம் பறந்தாள், ஆட்சி நடத்தினாள், அனைத்தையும் சாதித்தாள் என்று அங்கும் இங்கும் ஒன்றாக இருக்கும் உண்மைகளை செய்தியாய் மட்டும் வாசித்து நம் பெண்ணினமே வென்று விட்டது என்று பெருமை பேசும் கூட்டமாக இருந்து விடாமல் பெண்களாகிய நாம் அனைவரும் தேச நலனில், தன் வளர்ச்சியில் அனைவரும் தனக்கான தனி சுதந்திரத்தில் பங்கேற்று ஒன்றுபட்ட பெண்களுக்கான வளர்ச்சியை எட்ட வேண்டும் என்ற உள் உணர்வை அனைத்து பெண்கள் மனதிலும் உருவாக்க வேண்டும் என்பதே இந்த மாநாட்டின் பெரும் நோக்கம். சிறுமிகள் பலாத்காரம் செய்யப்படுவதும், பெண்கள் மானபங்கப்படுத்தப்படுவதும் பணியாற்றும் அலுவலகங்களில் சக ஆண் ஊழியர்களால் பாலியல் சீண்டலுக்கு உள்ளாக்கப்படுவதும், இந்த சமூகம் ஒரு பெண்ணை ஆணின் நுகர்வு பொருளாக மட்டுமே பார்ப்பதும், பெண்கள் இன்னும் எந்த நிலையில் இந்த சமூகத்தில் வைக்கப்பட்டு உள்ளார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. பெண்களின் வளர்ச்சிக்கு எதிரான இவ்வாறான எல்லா போக்குகளையும் எதிர்த்து நின்று வெற்றி கண்டால் தான் இந்த சமூகம் ஒன்றிணைந்த வளர்ச்சியை எட்ட முடியும். அடுப்பு ஊதும் பெண்களுக்கு படிப்பெதற்கு எனும் மடமைத்தனத்தை உடைத்து எறிந்து தான் இன்றைக்கு பட்டங்கள் ஆயிரம் பெற்று பாரினில் பெண்கள் சிறந்து நிற்கின்றோம்.

ஆயினும் கொரோனாவை தடுப்பதற்கு தடுப்பூசியை செலுத்தும் போது அந்த நோய் தன்னை உருமாற்றி கொண்டு மீண்டும் மனிதர்களை தாக்குவதைப் போல் கல்வி மறுக்கப்பட்ட பெண்கள் இன்றைக்கு கல்வியாளர்களாக மாறிய சூழலிலும் அவர்களுக்கான அடிமை நிலையையே பல்வேறு பாலியல் துன்புறுத்தல்கள், அடக்குமுறைகள், பழமை வாதங்கள் எனும் பொய்யுரைகள் மூலம் மீண்டும் மீண்டும் நம்மை அடிமைப்படுத்துகிற நிலையை எதிர்த்து தொடர்ந்து போராட வேண்டிய அவசியத்தை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். மனதில் உறுதி கொண்டு நமக்கான உரிமையை, நமக்கான விடுதலையை, நமக்கான கல்வியை, நமக்கான பாதுகாப்பை, நமக்கான தனித்துவத்தை மீட்டெடுத்து பெண் இனத்தின் பேருவகையை மண்ணில் நிலை நிறுத்த நாம் அனைவரும் உறுதி ஏற்போம். இதுவே பெண்ணின் பெருந்தக்க யாவுள எனும் சொல்லுக்கு நிகராய் நாம் கற்கும் நவீன சமத்துவ பொருளாகட்டும். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு எனும் வரிகளை உள்வாங்குவோம். காக்கைகள் போல் கிடைத்ததை பகிர்ந்து கொள்வோம். எறும்புகளைப் போல் எதிர்காலத் தேவைக்கான உரிமையை இன்றே திறல செய்வோம். இவை அனைத்தும் நமக்கு கிட்டுமாயின் குயில்களைப் போல் ஆனந்தமாய் பாடி திரிவோம். பெண் அடிமைத்தனம் என்னும் பேயை விரட்டி மன்னடிமை நீங்கிட புதியதோர் உலக செய்வோம். அரிய வாய்ப்புக்கு நன்றி வணக்கம். ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com